## இன்றைய வேளாண் செய்திகள்

### தொடர் மழை: உயர்ந்து வரும் அணைகளின் நீர்மட்டம்

தமிழகத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக முக்கிய அணைகள், ஏரிகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து வருகிறது. கடந்த 4 நாள்களுக்குள் பவானிசாகர், வைகை, மணிமுத்தாறு, பாபநாசம், பெரியாறு உள்பட மாநிலத்தில் 10-க்கும் மேற்பட்ட அணைகள், ஏரிகளில் நீரின் அளவு உயர்ந்துள்ளது. அதிகபட்சமாக பாபநாசம் அணையின் நீர்மட்டம் 12 அடி உயர்ந்துள்ளது. சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரங்களான புழல், பூண்டி, செம்பரம்பாக்கம் உள்ளிட்ட ஏரிகளின் நீர் இருப்பும் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டில் பருவ மழை பொய்த்ததால், அணைகளின் நீர்மட்டம் போதுமான அளவு உயரவில்லை. இந்நிலையில், இந்த ஆண்டு மழைப் பொழிவு அதிக அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதை உறுதிப்படுத்தும் விதமாக வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலையால் தமிழகம் முழுவதும் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. மேலும் வடகிழக்குப் பருவமழையும் தீவிரமடைந்து வருகிறது. இதனால் அணைகள், ஏரிகளுக்கு கணிசமான நீர்வரத்து உள்ளது. மழை தொடர்ந்து பெய்து வருவதால் அமராவதி, பரம்பிக்குளம், ஆழியார், திருமூர்த்தி அணைகளிலிருந்து பாசனத்துக்காக திறந்து விடப்பட்ட தண்ணீர், படிப்படியாக நிறுத்தப்பட்டு வருகிறது. சென்னையைப் பொருத்தவரை, முக்கிய குடிநீர் ஆதாரங்களுக்கு நீர்வரத்து அதிகரித்திருப்பதால் நகரில் குடிநீர் விநியோகம் மேம்படலாம் எனக் கூறப்படுகிறது. இது குறித்து குடிநீர் வாரிய உயர் அதிகாரி ஒருவர் கூறியது:

பூண்டி, புழல், செம்பரம்பாக்கம் உள்ளிட்ட ஏரிகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதைத் தவிர வீராணம் ஏரியிலிருந்து, சென்னையின் குடிநீர்த் தேவைக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. பருவமழை தொடர்ந்து பெய்து, ஏரிகளின் நீர்மட்டம் அதிகரித்தால் அடுத்த ஆண்டு கோடைக் காலத்தில் நகரில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாது. நீர் இருப்பைப் பொருத்து நகரில் விநியோகிக்கும் குடிநீரின் அளவை அதிகரிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

**அணைகள், ஏரிகளில் நீர்மட்டத்தின் விவரம் (அடியில்)**

**நீர் ஆதாரங்கள் அக்.15 அக். 20**

மேட்டூர் 88.90 88.55

பவானிசாகர் 70.18 72.56

அமராவதி 68.88 67.15

பெரியாறு 125.5 126.6

வைகை 43.18 44.9

பாபநாசம் 63.6 75.65

மணிமுத்தாறு 54.57 59.65

பேச்சிப்பாறை 32.7 35.3

கிருஷ்ணகிரி 48.7 49.7

சாத்தனூர் 72.6 72.55

சோலையாறு 158 156.5

பரம்பிக்குளம் 71.90 71.90

ஆழியாறு 118.7 118.5

திருமூர்த்தி 46.87 43.09

பூண்டி 18.68 19.5

புழல் 6.83 7.08

செம்பரம்பாக்கம் 10.64 11.81

வீராணம் 44.6 46

## மாமல்லபுரத்தில் 51 மி.மீ. மழை

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் திங்கள்கிழமை காலை நிலவரப்படி அதிகபட்சமாக 51 மி.மீ. மழை பதிவானது. வடகிழக்குப் பருவமழை தொடங்கியதைத் தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 4 நாள்களாக அடை மழை பெய்து வருகிறது. குறிப்பாக தாம்பரம், கேளம்பாக்கம், மாமல்லபுரம் உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் தீபாவளி விற்பனையும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு முழுவதும் மழை தொடர்ந்து பெய்தது. இது திங்கள்கிழமையும் நீடித்தது. இதனால் காஞ்சிபுரம் மாவட்டம், முழுவதும் பள்ளி, கல்லூரிகளுக்கு திங்கள்கிழமை மாவட்ட நிர்வாகம் விடுமுறை அறிவித்தது. திங்கள்கிழமை காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் சராசரியாக 19.55 மி.மீ. மழை பதிவானது. அதிகபட்சமாக மாமல்லபுரத்தில் 51.80 மி.மீ. மழை பெய்தது. மாவட்டத்தில் பிற இடங்களில் பெய்த மழை அளவு (மி.மீ.ரில்): தாம்பரம் 33.80, கேளம்பாக்கம் 24.80, ஸ்ரீபெரும்புதூர்

19.10, செய்யூர், திருக்கழுகுன்றம் 18, உத்தரமேரூர் 14, மதுராந்தகம் 9, செங்கல்பட்டு 6, காஞ்சிபுரம் 1.

## சேவூரில் ரூ. 30 லட்சத்திற்கு நிலக்கடலை ஏலம்

சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 30 லட்சத்திற்கு நிலக்கடலை ஏலம் திங்கள்கிழமை நடைபெற்றது. இந்த ஏலத்திற்கு 2,000 மூட்டைகள் வந்திருந்தன. இதில், குவிண்டால் ஒன்றுக்கு முதல் ரக நிலக்கடலை ரூ. 4,800 முதல் ரூ. 5,110 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ. 4,200 முதல் ரூ. 4,600 வரையிலும், 3-ஆவது ரகம் ரூ. 3,500 முதல் ரூ. 4,100 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 30 லட்சதிற்கு ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்தில் திருச்செங்கோடு, மணப்பாறை ஆகிய பகுதிகளில் இருந்து 12 வியாபாரிகளும், மலையப்பாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், அன்னூர், மங்கரசவலையபாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர் ஆகிய பகுதிகளில் இருந்து 402 விவசாயிகளும் பங்கேற்றனர்.

## வேலூர் மாவட்டத்தில் 3-வது நாளாக தொடர்ந்த மழை

வேலூர் மாவட்டத்தில் தொடர்ந்து 3-ஆவது நாளாக பரவலாக நல்ல மழை பெய்தது. தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கைக்கும், தமிழகத்துக்கும் இடையே காற்றழுத்த தாழ்வு நிலை நீடிக்கும் நிலையில், வேலூர் மாவட்டத்தில் திங்கள்கிழமை பரவலாக நல்ல மழை பெய்தது. சனிக்கிழமை இரவு முதல் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் லேசான மழை முதல் மிதமான மழை வரை பெய்தது. திங்கள்கிழமை காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு (மி.மீட்டரில்): ஆம்பூர் 12.6, அரக்கோணம் 2, சோளிங்கர் 7.2, திருப்பத்தூர் 5.4, வாணியம்பாடி 2, வேலூர் 5.4, வாலாஜாபேட்டை 1, ஆலங்காயம் 3.2, மேல்ஆலத்தூர் 8.8,

ஆற்காடு 5.3. வேலூர் நகரில் திங்கள்கிழமை காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இதனால் பகலில் குளிர்ந்த காற்று வீசியது. அவ்வப்போது லேசான தூறல் மழை பெய்தது.

## <u>கிருஷ்ணகிரி அணை நீர்மட்டம் 50 அடியாக உயர்வு</u>

தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்புப் பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால், கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 50 அடியாக உயர்ந்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதேபோல, கர்நாடக மாநிலம், பெங்களூரு உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்து வருவதால், தென்பெண்ணை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால், கிருஷ்ணகிரி அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை மாலையில் கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 200 கன அடியாக இருந்தது. தொடர்ந்து, திங்கள்கிழமை காலை 300 கன அடியாகவும், மாலையில் 400 கன அடியாகவும் நீர்வரத்து அதிகரித்து வருவதால், அணை நீர்மட்டம் 50 அடியாக உயர்ந்தது. தொடர்ந்து மழை பெய்தால், விரைவில் அணையின் மொத்தக் கொள்ளளவான 52 அடியாக உயர வாய்ப்புள்ளது. மொத்தக் கொள்ளவுக்கு இன்னும் 2 அடியே உள்ளதால், பொதுப் பணித் துறையினர் நீர் வரத்தை 24 மணி நேரமும் தீவிரமாகக் கண்காணித்து வருகின்றனர். குளிர் அதிகரிப்பு: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த 2 நாள்களாக மழை பெய்து வருகிறது. மேலும், தொடர்ந்து, மேக மூட்டமாக உள்ளதால், மாவட்டம் முழுவதும் குளிர் அதிகமாக உள்ளது. பகலிலும் குளிர்ந்த காற்று வீசுவதால், வெளியே வரும் பொதுமக்கள் ஸ்வெட்டர் போன்ற ஆடைகளை அணிந்து வருகின்றனர்.

## குடவாசலில் 115.80 மி.மீ. மழை

குடவாசலில் ஞாயிற்றுக்கிழமை 115.80 மில்லி மீட்டர் மழைப் பெய்துள்ளது. மாவட்டத்தில் கடந்த 3 நாள்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால், நீர்நிலைகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. தவிர, சம்பா பயிருக்கும் மழை பயனுள்ளதாக இருப்பதாக கருத்து தெரிவிக்கும் விவசாயிகள், மகிழ்ச்சியாக தாளடி பணியையும் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஒரு வாரமாக மாவட்டத்தில் மழை பெய்து வருகிறது. இதில் குடவாசல், திருத்துறைப்பூண்டி, திருவாரூர் ஆகிய இடங்களில் அதிக மழைப் பொழிவு பதிவாகியுள்ளது. திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகபட்சமாக குடவாசலில் 115.80 மில்லி மீட்டர் மழைப் பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் பிற இடங்களில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு: திருத்துறைப்பூண்டி - 84.20, திருவாரூர், பாண்டவையாறு தலைப்பு - 84, நன்னிலம் - 75.60, நீடாமங்கலம் - 73, மன்னார்குடி - 64.04, வலங்கைமான் - 63.20, முத்துப்பேட்டை - 31 என்ற அளவில் மழைப் பதிவானது. திங்கள்கிழமை மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. தொடர் மழையின் காரணமாக, மாவட்டத்தில் பள்ளிகளுக்கு மட்டும் திங்கள்கிழமை விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

## திருச்செந்தூர், ஆறுமுகனேரி பகுதியில் கனமழை

திருச்செந்தூர், ஆறுமுகனேரி, காயல்பட்டினம் ஆகிய பகுதியில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. திருச்செந்தூர் பகுதியில் வெள்ளி மற்றும் சனிக்கிழமை இரவு நேரங்களில் தொடர்ந்து பல மணிநேரம் கன மழை பெய்தது. இதனால் நகரின் பல்வேறு பகுதிகளில் மழை நீரானது வெள்ளம் போல் ஓடியது. திருக்கோயில் வளாகம், சன்னதித் தெரு, புளியடித் தெரு,

ரதவீதிகள், தினசரி சந்தை, பகத்சிங் பேருந்து நிலையம், காமராஜர் சாலை உள்ளிட்ட இடங்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியும், சாலையில் குளம் போல தேங்கியும் காணப்பட்டது. இதனால் கோயிலுக்கு வந்த பக்தர்களும், பொதுமக்களும் சிரமமடைந்தனர். குறிப்பாக தீபாவளி பண்டிகைக்காக ஜவுளி மற்றும் பொருள்கள் வாங்க முடியாமல் பொதுமக்கள் பெரும் அவதிப்பட்டனர். குமாரபுரம், வீரபாண்டியன்பட்டணம் ராஜ்கண்ணாநகர், குறிஞ்சி நகர், ஜெ.ஜெ.நகர், வாவு நகர் உள்ளிட்ட இடங்களில் வீடுகளை வெள்ளம் சூழ்ந்து காணப்பட்டது. ஆறுமுகனேரி: ஆறுமுகனேரி, காயல்பட்டினம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் நள்ளிரவு வரை கன மழை பெய்தது. இதனால் தெரு மற்றும் சாலைகளின் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கியிருந்தது. இந்த மழையால் ஆறுமுகனேரி மற்றும் சுற்று வட்டாரப்பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான உப்பளங்களில் மழைநீர் தேங்கியுள்ளதால் உப்பளத் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. பேயன்விளை கீழத்தெருவைச் சேர்ந்த பூனால் பாண்டியன் என்பவரது வீட்டின் மண் சுவர் இடிந்து விழுந்ததில் 4 வெள்ளாடுகள் இறந்தன. தொடர்மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மழை விவரம்: திங்கள்கிழமை காலை 8 மணி நிலவரப்படி, திருச்செந்தூரில் 114 மி.மீ., குலசேகரன்பட்டினத்தில் 72 மி.மீ., காயல்பட்டினத்தில் அதிகபட்சமாக 175 மி.மீ. மழையும் பதிவாகி உள்ளது.

## பாபநாசம் அணைக்கு 3500 கனஅடி நீர்வரத்து சேர்வலாறு அணை நீர்மட்டம் 100 அடியை நெருங்குகிறது

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழையால், அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. 153 அடி கொள்ளளவு கொண்ட சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 15 அடி உயர்ந்து, திங்கள்கிழமை மாலை நிலவரப்படி 100 அடியை நெருங்கும்

நிலையில் இருந்தது. வங்கக் கடலில் நீடிக்கும் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை மற்றும் பருவமழை காரணமாக திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பலத்த பெய்து வருகிறது. அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அணைகள், இம்மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை 95, பாபநாசம் கீழ் அணை 98, சேர்வலாறு அணை 60, மணிமுத்தாறு அணை 55.2, கடனாநதி அணை 18, ராமநதி அணை 51, கருப்பாநதி அணை 6, குண்டாறு அணை 13, அடவிநயினார் அணை 7, அம்பாசமுத்திரம் 42, சேரன்மகாதேவி 43, கன்னடியன் அணைக்கட்டு 47, களக்காடு 23.2, ஸ்ரீவைகுண்டம் 1, தென்காசி 17.4, செங்கோட்டை 11.4, ஆய்க்குடி 25.2, ஆலங்குளம் 56.5. கணிசமான நீர்வரத்து: பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 3,473.08 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 842 கனஅடியும், சேர்வலாறு அணைக்கு 2,500 கனஅடியும், கடனாநதி அணைக்கு 241.40 கனஅடியும், ராமநதி அணைக்கு 155.02 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு 83 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு 44 கனஅடியும், வடக்குப் பச்சையாறு அணைக்கு 26.03 கனஅடியும், கொடுமுடியாறு அணைக்கு 55 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

100 அடியை நெருங்கும் சேர்வலாறு: நீர்வரத்து அதிகரித்திருப்பதால் அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. 153 அடி கொள்ளளவு கொண்ட சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 15 அடி உயர்ந்து, திங்கள்கிழமை மாலை நிலவரப்படி 99 அடியாக இருந்தது.

பாபநாசம் அணை நீர்மட்டம் 4.20 அடி உயர்ந்து 75.65 அடியாகவும், மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 59.65 அடியாகவும்,

கடனாநதி அணை நீர்மட்டம் 4.50 அடி உயர்ந்து 59.50 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 6 அடி உயர்ந்து 60 அடியாகவும் இருந்தது.

கருப்பாநதி அணை நீர்மட்டம் 2.60 அடி உயர்ந்து 45.28 அடியாகவும், குண்டாறு அணை நீர்மட்டம் முழுக் கொள்ளளவை எட்டி 36.10 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 1.25 அடி உயர்ந்து 112.75 அடியாகவும், வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 10 அடியாகவும், கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 4 அடி உயர்ந்து 12 அடியாகவும் இருந்தது. அருவிகளில் வெள்ளம் நீடிப்பு: நீர்வரத்து கணிசமாக இருந்ததால் திங்கள்கிழமை 4ஆவது நாளாக மணிமுத்தாறு அருவியில் வெள்ளப்பெருக்கு தொடர்ந்தது. எனவே அருவிக்குச் செல்ல சுற்றுலாப் பயணிகளுக்கு வனத் துறையினர் தடை விதித்தனர். பாபநாசம் அகஸ்தியர் அருவி, பாணதீர்த்த அருவிகளில் வெள்ளப்பெருக்கு இருந்தது.

**<u>கீழணையிலிருந்து 3 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றம்</u>**

காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள கீழணையிலிருந்து கொள்ளிடம் ஆற்றில் சுமார் 3 ஆயிரம் கனஅடிநீர் வெளியேற்றப்பட்டு வீணாக கடலுக்குச் செல்கிறது. கடலூர், அரியலூர், தஞ்சை, நாகை மாவட்டங்களில் தொடர் கனமழை பெய்து வருவதாலும், கல்லணையிலிருந்து கீழணைக்கு 7 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளதாலும், காட்டுமன்னார்கோவில் அருகே அணைக்கரையில் கீழணை வேகமாக நிரம்பி வருகிறது. திங்கள்கிழமை நிலவரப்படி கீழணை 8அடி நீர் அளவை தொட்டுள்ளது. கீழணையின் மொத்தக் கொள்ளளவு 9 அடியாகும். கீழணைக்கு கூடுதலாக நீர் வருவதாலும், கீழணையிலிருந்து பாசன வாய்க்கால்களில் நீர் திறந்துவிட்டால் வெள்ளப் பெருக்கெடுத்து நெற்பயிர்கள் பாழாகும் என்பதால், பொதுப்பணித் துறையினர் கீழணையிலிருந்து விநாடிக்கு 3

ஆயிரம் கனஅடி நீரை திங்கள்கிழமை முதல் வெளியேற்றுகின்றனர். இந்த நீர் கொள்ளிடம் ஆற்றின் வழியாக கடலில் கலந்து வீணாவதால், நீரை தேக்கமுடியாமல் போனது குறித்து விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

சேலம்: நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்வதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. வினாடிக்கு 9353 கனஅடி என்ற அளவில் இருந்த நீர்வரத்து, இன்று காலை நிலவரப்படி வினாடிக்கு 12566 கனஅடி என்று அதிகரித்துள்ளது. வினாடிக்கு 500 கனஅடி வீதம் நீர் திறந்துவிடப்படுகிறது. வரத்து அதிகம், திறப்பு குறைவு என்பதால், அணையின் நீர் மட்டம் அதிகரித்து வருகிறது. இன்று காலை நிலவரப்படி, மேட்டூர் அணையின் நீர் மட்டம் 89.54 அடியாகவும், நீர் இருப்பு 52.02 டி.எம்.சி.,யாகவும் உள்ளது.

**பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடைந்ததை அடுத்து, திருவள்ளூர் மாவட்டம் முழுவதும், கடந்த நான்கு நாட்களாக மழை பெய்து வருகிறது. சில இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.இதனால், சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பூண்டி ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையால், ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.நேற்று காலை, 6:00 மணி நிலவரப்படி, மழைநீர் ஏரிக்கு வினாடிக்கு, 374 கன அடி வீதமும், கிருஷ்ணா நீர், 109 கன அடி என, மொத்தம், 483 கன அடி தண்ணீர் வருகிறது. ஏரியில் தற்போது, 208

மில்லியன் கன அடி நீர் உள்ளது. நீர்மட்டம், 19.50 அடி. இங்குள்ள இணைப்பு மற்றும் பேபி கால்வாயில் வினாடிக்கு, 210 கன அடி வீதம் சென்னை புழல் ஏரிக்கு திறந்து விடப்பட்டு உள்ளது. ஊத்துக்கோட்டை ஜீரோபாயின்ட்டில் வினாடிக்கு, 100 கன அடி வீதம் கிருஷ்ணா நீர் வருகிறது.

**<u>கோமுகி அணையில் நீர் மட்டம் உயர்வு</u>**

கச்சிராயபாளையம்: கச்சிராயபாளையம் பகுதியில் பரவலாக மழை பெய்து வருவதால் கோமுகி அணையின் நீர் மட்டம் கனிசமாக உயர்ந்து வரு கிறது. கச்சிராயபாளையம், கல்வராயன் மலைப்பகுதியில் சில தினங்களாக இரவு நேரங்களில் மட்டும் மழை பெய்தது. கடந்த 2 நாட்க ளாக பகல் நேரங்களிலும் மழை பெய்ய துவங்கியுள்ளது. கச்சிராயபாளையம் பகுதியில் நேற்று முன் தினம் 3 மில்லி மீட்டர் அளவு மழை பதிவானது. இதனால் கோமுகி அணைக்கு அதிக தண்ணீர் வர துவங்கியுள்ளதால் அணையின் நீர் மட்டம் உயர்ந்து 34 அடியை எட்டியுள்ளது. கச்சிராயபாளையம், கல்வராயன் மலைப் பகுதியில் குறைந்த மழை பெய்ததால் இப்பகுதி விவசாயிகள், பொதுமக்கள் கவலையடைந்துள்ளனர்.

**<u>உலக விவசாயிகள் தினம்</u>**

சங்கராபுரம்: சங்கராபுரம் ரோட்டரி கிளப் சார்பில் உலக விவசாயிகள் தினம் கொண்டாடப்பட்டது. ரோட்டரி தலைவர் சாப்ஜான் தலைமை தாங்கினார். ரோட்டரி டிரஸ்ட் சேர்மன் ஜனார்தனன், முன்னாள் தலைவர்கள் ராஜேந்திரன், மூர்த்தி, வெங்கடேசன், குணசேகரன், செயலாளர் வேல்முருகன் முன்னிலை வகித்தனர். ரகோத்தமன் வரவேற்றார். அண்ணாதுரை, மகேந்திரன், தேர்வு தலைவர் மன்ன பலராமன், ஆறுமுகம், சின்னகண்ணன், ராமதாஸ், சுரேஷ், துரை, சவுந்தர் கலந்து கொண்டனர். பொருளாளர் சுதாகரன் நன்றி கூறினார்.

## வேளாண் கண்டுணர்வு சுற்றுலா: அறிவியல் மையத்தில் பயிற்சி

நாமக்கல்: நவீன வேளாண் கண்டுணர்வு சுற்றுலா திட்டத்தின் கீழ், 50 விவசாயிகள், சந்தியூர் வேளாண் அறிவியல் மையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வேளாண் தொழில் நுட்ப மேலாண் முகமையின் கண்டுணர்வு சுற்றுலா இனத்தின் கீழ், நாமக்கல் வட்டாரத்தை சேர்ந்த, 50 முன்னோடி விவசாயிகள், சந்தியூர் வேளாண் அறிவியல் மையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் மாயகிருஷ்ணன் துவக்கி வைத்தார். சந்தியூர் வேளாண் அறிவியல் மையத்தில், நவீன வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சியும், செயல் விளக்கங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. உதவி பேராசிரியர் கீதா, பயிர்களின் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்து பயிற்சியும், செயல் விளக்கமும் அளித்தார். உதவி பேராசிரியர் சுதா, காளாண் வளர்ப்பு குறித்து பயிற்சி அளித்தார். ஏற்பாடுகளை வேளாண் தொழில் நுட்ப மேலாண் முகமை மேலாளர் சுபத்ரா, தொழில் நுட்ப வல்லுனர்கள் தினேஷ்வரன், சங்கர்கணேஷ் ஆகியோர் செய்தனர்.

## தஞ்சாவூர் மாவட்டத்தில் 672 மி.மீ., மழை பதிவு

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் (19ம் தேதி) காலை, 8 மணி முதல் நேற்று காலை, 8 மணி வரை, 672 மி.மீ., மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக கும்பகோணம், பாபநாசம் பகுதிகளில், 70 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில், நான்காவது நாளாக நேற்றும், மழை நீடித்தது. நேற்றுமுன்தினம் காலை, 8 மணி முதல், நேற்று காலை, 8 மணி வரை மாவட்டம் முழுவதும், 672 மி.மீ., மழை பெய்துள்ளது. கும்பகோணம், பாபநாசம் பகுதிகளில் அதிகபட்சமாக, 70 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மாவட்டத்தின் இதர பகுதிகளில் பெய்துள்ள மழையளவு கீழ்வருமாறு: அதிராம்பட்டிணம், 20.40 மி.மீ., தஞ்சாவூர், 24.90,

திருவையாறு, 20, திருக்காட்டுப்பள்ளி, 9.60, வல்லம், 35.50, கல்லணை, 8.40, அய்யம்பேட்டை, 42, திருவிடைமருதூர், 52, மஞ்சளாறு, 48, நெய்வாசல் தென்பாதி, 37.40, பூதலூர், 12.20, வெட்டிக்காடு, 15.40, ஈச்சன்விடுதி, 10.20, ஒரத்தநாடு, 19.80, மதுக்கூர், 34.20, பட்டுக்கோட்டை, 22, பேராவூரணி, 26, கீழ் அணை, 67.20, குருங்குளம், 26 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டம் முழுவதும் இதுவரை சராசரியாக, 514.52 மி.மீ., மழை பெய்துள்ளது. கடந்த, மூன்று ஆண்டுகளில் பெய்துள்ள மழை அளவை ஒப்பிடும்போது, 15 சதவீதம் அதிகமாக பெய்துள்ளது.

**அணைகளின் நீர்மட்டம்**

தேனி : பெரியாறு 126.60 (152) அடி. நீர்வரத்து 2657 கன அடி. வெளியேற்றம் 1400 கன அடி. வைகை 44.09 (71)அடி. நீர் வரத்து 1981 கனஅடி. நீர் திறப்பு 1660 கன அடி. மஞ்சளாறு 56.80 (57)அடி, நீர் வரத்து 178 கன அடி.வெளியேற்றம் 8 கனஅடி.சோத்துப்பாறை 126.28 (126.28)அடி, நீர் வரத்து 135 கன அடி. வெளியேற்றம் 135 கனஅடி. மழையளவு(மி.மீ,):பெரியாறு 9.2, தேக்கடி 22.2, கூடலூர் 21.6, சண்முகாநதி 22, உத்தமபாளையம் 8, வைகை 6,வீரபாண்டி 8,சோத்துப்பாறை 8.

**காரைக்குடியில் மழையால் மகிழ்ச்சி! "பொத்தக்கட்டை' மீன் பிடிப்பு**

காரைக்குடி : கடந்த ஒரு வாரமாக பெய்து வரும் தொடர் மழையால் கண்மாய்கள் நிரம்பி மறுகால் பாய்வதால், "பொத்தக்கட்டை' மூலம் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர் ஊர் மக்கள். சிவகங்கை மாவட்டத்தில் சாக்கோட்டை ஒன்றியத்தில், கடந்த ஒரு வாரத்தில், 200 மி.மீ., மழையும், மற்ற ஒன்றியங்களில் 100 மி.மீ., வரையும் மழை பெய்துள்ளது. அனைத்து கண்மாய்களும் நிரம்பி, மறுகால் பாய்கிறது. மறுகால் பாயும் வரத்துக்கால்வாய்களில், "பொத்தக்கட்டை' அமைத்து மீன் பிடித்து வருகின்றனர் பள்ளத்தூர் கொத்தரியை சேர்ந்தவர்கள்.

சோலையாண்டவர் கோயில் கண்மாயிலிருந்து நிரம்பி, வெளி வரும் தண்ணீர், அருகில் உள்ள கொத்தரி கண்மாய்க்கு செல்கிறது. இவ்வாறு செல்லும் தண்ணீரின் பகுதியில் கால்வாய் அமைத்து, அதை ஒரு இடத்தில் தேக்கி, தேக்கிய இடத்தில், பொத்தக்கட்டை அமைத்து, மீன் பிடித்து வருகின்றனர், கொத்தரியை சேர்ந்தவர்கள். கொத்தரியை சேர்ந்த சோலையன் கூறும்போது: கடந்த மூன்று ஆண்டுகளாக மழை இல்லாததால், மீன் பிடிப்பும் இல்லை. கடந்த சில நாட்களாக பெய்துள்ள மழையால், கண்மாய்களில் நீர் நிரம்பி அடுத்த கண்மாய்க்கு தண்ணீர் செல்கிறது. அவ்வாறு செல்லும் பகுதியில், உள்ள நீரை அணை போட்டு தேக்கி, தேக்கிய பகுதியில், கட்டையில் ஓட்டை போட்டு, தண்ணீரை பாய விடுவோம். தண்ணீர் செல்லும் எதிர் பகுதியில், வாய் அகலம் குறைவான மண்பானை இருக்கும். இரவு நேரங்களில், கட்டையில் உள்ள கண்கள் வழியாக செல்லும் நீரானது, சலங்கை சத்தம் போன்று இருக்கும். இந்த சத்தத்தை கேட்டு, எதிர்நீரில் வரும் மீன்கள், பொத்தகட்டையில் வந்து முட்டி, அருகில் உள்ள குடத்துக்குள் பாயும். காலையில் வந்து அந்த மீனை சேகரிப்போம். அயிரை, கெண்டை, கெளுத்தி மீன்கள் கிடைக்கும். கெண்டை மீன்கள் ஒரு கிலோ ரூ.50-க்கும், கெளுத்தி மீன்கள் ஒரு கிலோ ரூ.100-க்கும் விற்கும். இதற்கு அணை செய்ய, புற்று மண்ணை பயன்படுத்துவோம், என்றார்.

## <u>அறுவடை, விதைப்பு பணிகளில் விவசாயிகள் மும்முரம்</u>

தேனி : கம்பம் பள்ளத்தாக்கில் முதல் போக நெல் அறுவடை தொடங்கி உள்ள நிலையில், இரண்டாம் போகத்திற்கான நெல் விதைப்பு பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. லோயர்கேம்ப் முதல் தேனி பழனிசெட்டிபட்டி வரை மாவட்டம் முழுவதும் உள்ள நெல் விளையும் பகுதியான கம்பம் பள்ளத்தாக்கில் 14 ஆயிரத்து 707 ஏக்கரில் இருபோக

நெல் சாகுபடி நடக்கிறது. கடந்த மூன்றாண்டுகளாக மழை குறைவால் இரண்டாம் போகம் எடுக்க முடியாத நிலை காணப்பட்டது. இம்முறை வடகிழக்கு பருவமழை நல்ல முறையில் பெய்து வருவதால் இரண்டாம் போக நெல் சாகுபடி நல்ல முறையில் எடுக்க முடியும், என விவசாயிகள் நம்பி உள்ளனர். முதல் போக நெல் விதைப்பு பணிகள் திட்டமிட்டபடி தொடங்கியது. தற்போது நெல் அறுவடை நடந்து வருகிறது. இரண்டாம் போகம் தாமதம் ஆகிவிடக்கூடாது என்பதற்காக அறுவடை நடந்த உடனே இரண்டாம் போகத்திற்கான நெல் விதைப்பு பணிகள் நடந்து வருகின்றன. விவசாயிகள் அறுவடை ஒருபுறம், விதைப்பு மறுபுறம் என மிகவும் உற்சாகமாக உள்ளனர்.

## <u>கொட்டித் தீர்த்த மழை: வயல்களில் வெள்ளம்</u>

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில், மூன்றாவது நாளாக, கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக, நேற்று பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டன.

திருவாரூர் மாவட்டம் முழுவதும், மூன்று தினங்களாக கன மழை பெய்து வருகிறது. நேற்று முன் தினம் காலை, 8 மணி முதல் நேற்று காலை, 8 மணி வரை, திருவாரூரில், 84 மி.மீ., மழையும், குடவாசலில், 115.80 மி.மீ., மன்னார்குடியில், 64 மி.மீ, முத்துப்பேட்டையில், 31 மி.மீ., நன்னிலத்தில், 75.60 மி.மீ., நீடாமங்கலத்தில், 73 மி.மீ., திருத்துறைப்பூண்டியில், 84.20 மி.மீ., வலங்கைமானில், 63.20 மி.மீ., பாண்டவையாறு தலைப்பில், 84 மி.மீ., என மொத்தம் மாவட்டம் முழுவதும் 674.80 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. இதில், அதிக அளவாக குடவாசலில், 115.80 மி.மீ., மழை பெய்துள்ளது. மாவட்டத்தில், மொத்தம், மூன்று லட்சத்து, 66 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி நடைபெற்றுள்ள நிலையில், கடந்த வாரம் வரை, கருகும் பயிருக்கு நீர் கேட்டு விவசாயிகள் சாலை மறியல் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், மூன்று தினங்களாக

மாவட்டம் முழுவதும் மழை பெய்து வருவதால், தாழ்வான பகுதிகளில் உள்ள வயல்களில் மழை நீர் தேங்கியுள்ளது. இதை, மோட்டார் பம்பு மூலம் வெளியேற்றும் பணியில், விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். கனமழை காரணமாக, நேற்று திருவாரூர் மாவட்டம் முழுவதும் அனைத்து பள்ளிகளுக்கும் விடுமுறை அளித்து கலெக்டர் மதிவாணன் உத்தரவிட்டார். மேலும் மாவட்டத்தில் வெள்ளதடுப்பு முன்னேற்பாடுகள் குறித்து, கலெக்டர் மதிவாணன் திருவாரூர் அருகே கங்களாஞ்சேரி, நன்னிலம் உட்பட பல்வேறு இடங்களில் ஆய்வு செய்தார்.

**பிளவக்கல்லில் 22 மி.மீ.,மழை**

விருதுநகர் : விருதுநகர்மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்தது. இதனால் சாலைகள், தாழ்வான பகுதிகளை நீர்சூழ்ந்ததால் வாகன ஓட்டிகள் அவதிப்பட்டனர். நேற்றுகாலை 8.30 மணி நிலவரப்படி மழையளவு(மி.மீ.,): அருப்புக்கோட்டை 3, சாத்தூர் 2, ஸ்ரீவி.,4, சிவகாசி 3.6, விருதுநகர் 1.2, திருச்சுழி 6, காரியாபட்டி .4, வத்ராப் 16, பிளவக்கல் 22, கோவிலாங்குளம் 3.2. இந்நிலையில் விருதுநகரில் நேற்று காலை சாரல் மழை பெய்தது. 8.30 மணிக்குப்பின் அது ஓய்ந்தது. பகலில் மழையில்லாமல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

**நெல்லையில் தொடர் கனமழை; அணைகளில் நீர்மட்டம் உயர்வு**

திருநெல்வேலி : நெல்லையில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துவருகிறது. நெல்லை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்துவருகிறது. மழையினால் நேற்று திங்கள், இன்று செவ்வாய்க்கிழமைகளில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று காலை வரையிலான புள்ளிவிபரப்படி பாபநாசத்தில் அதிகபட்சமாக 95 மி.மீ.,மழை பதிவானது. பாபநாசம் அணைக்கு வினாடிக்கு 3 ஆயிரத்து 473 கனஅடி நீர்வரத்து இருந்தது.

நேற்று காலையில் அணையின் நீர்மட்டம் முந்தைய தினத்தைவிட 4.20 அடி உயர்ந்து 75.65 அடியாக இருந்தது. சேர்வலாறு அணையில் 60 மி.மீ.,மழை பதிவானது. வினாடிக்கு 2 ஆயிரத்து 500 கனஅடி வீதம் தண்ணீர் வந்தது. ஒரே நாளில் 15 அடி உயர்ந்து 95.80 அடியாக உயர்ந்தது. கடனாநதி அணையின் நீர்மட்டம் 4.50 அடி உயர்ந்து 59.50 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 6 அடி உயர்ந்து 60 அடியாகவும் இருந்தது.குற்றால அருவிகளில் தொடர்ந்து அதிகஅளவில் தண்ணீர் கொட்டுகிறது. மணிமுத்தாறு அருவியில் வெள்ளப்பெருக்கு காரணமாக சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்படவில்லை.

## அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. மலையோரப் பகுதிகளில் இடைவிடாமல் பெய்து வரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.பெருஞ்சாணி அணை நீர் மட்டம் 64.95 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 801 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. சிற்றாறு1-15.32, சிற்றாறு2-15.42, பொய்கை -7.50, மாம்பழத்துறையாறு-46.26 அடியாக உள்ளது.சிற்றாறு1 அணைக்கு வினாடிக்கு 284 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து 200 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. சிற்றாறு2 அணைக்கு வினாடிக்கு 116 கனஅடி நீரும், மாம்பழத்துறையாறு அணைக்கு 43 கனஅடி நீரும் வந்து கொண்டிருக்கிறது.நாகர்கோவில் நகருக்கு குடிநீர் வழங்கும் முக்கடல் அணை நிரம்பி வழிகிறது. அணைக்கு வரும் மழை நீர் அப்படியே உபரி நீராக வெளியேற்றப்படுகிறது. மழை காரணமாக திற்பரப்பு அருவியில் வெள்ளப்பெருக்கு காணப்படுகிறது.

தினகரன்

## இன்றையவேளாண் செய்திகள்

### விழுப்புரம் மாவட்டத்தில் ஏரி, குளங்கள் நிரம்புகிறது

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் 4 வது நாளாக கனமழை நீடித்து வருகிறது. நேற்று 114 மிமீ மழை பதிவாகியுள்ளது. விழுப்புரம் நகரில் மழைநீரை வெளியேற்ற நகராட்சி நிர்வாகம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததால் மக்கள் பாதிப்படைந்துள்ளனர். வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை அதே இடத்தில் நீடித்து வருவதால் தமிழகத்தில் மழை நீடித்து வருகிறது. கடந்த 4 நாட்களாக பெய்த மழையினால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று காலை முதல் இடைவிடாமல் கொட்டிய மழையால் ஏரி, குளம், குட்டைகளை நிரம்பியது.சிறிது நேரத்துக்கு தூரல், பின்னர் கனமழை என நாள் முழுக்க இதே நிலை நீடித்து வருகிறது. தொடர்ந்து பெய்துவரும் மழையினால் நகரின் பல்வேறு இடங்களில் மழைநீர் சூழ்ந்துள்ளது. அகரம்பாட்டையில் வீடுகளை சூழ்ந்த தண்ணீரை வெளியேற்ற நகராட்சி நிர்வாகம் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மேலும் புதிய பஸ்நிலையம், கீழ்பெரும்பாக்கம் தரைப்பாலத்தில் தேங்கிய நீரை நகராட்சி ஊழியர்கள், நெடுஞ்சாலை பணியாளர்கள் உதவியுடன் வெளியேற்றப்பட்டது. இருப்பினும் மக்கள் வசிக்கும் பகுதிகளில் போதிய நடவடிக்கை எடுக்கவில்லை.

தொடர்ந்து 4 நாட்களாக கொட்டிவரும் கனமழையால் தீபாவளி வியாபாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. தீபாவளிக்கு இன்னும் 2 தினங்களே உள்ள நிலையில் கொட்டும் மழையினால் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

அதே போல் பட்டாசுகள் விற்பனையும் சரிவடைந்துள்ளது. தொடர்மழையின் காரணமாக பட்டாசு வியாபாரம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதால் வியாபாரிகள் பாதிப்புக்கு உள்ளானார்கள். தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன், தூரல்கள் போட்டுக்கொண்டு இருக்கின்றன. விழுப்புரம் மாவட்டத்தில் மொத்தம் 113.50 மிமீ மழை பதிவாகியுள்ளது. சராசரியாக 12.61 மி.மீ மழை பாதிவானது.

**<u>திருவாரூர் மாவட்டத்தில் விடிய விடிய கொட்டிதீர்த்தது மழை குளங்கள் நிரம்புகிறது</u>**

திருவாரூர், : திருவாரூரில் விடிய விடிய கொட்டி தீர்த்த கன மழையால் குளம், குட்டைகள் நிரம்பி வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். வங்க கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தமிழகம் முழுவதும் பலத்த மழை பெய்து வருகிறது. அதன்படி திருவாரூரில் நேற்று முன்தினம் காலை 8மணி முதல் நேற்று காலை 8 மணி வரையில் 45.60 மி.மீ மழையும், குடவாசலில் 24.80 மி.மீ, மன்னார்குடியில் 23 மி.மீ, முத்துப்பேட்டையில் 24 மி.மீ, நன்னிலத்தில் 34.20 மி.மீ, நீடாமங்கலத்தில் 19 மி.மீ, திருத்துறைப்பூண்டியில் 40.60 மி.மீ, வலங்கைமானில் 19.10 மி.மீ, பாண்டவையாறு தலைப்பில் 41 மி.மீ என மொத்தம் மாவட் டம் முழுவதும் 271.30 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதில் மிக அதிக அளவாக திருவாரூரில் 45.60 மி.மீ மழை பெய்துள்ளது. திருவாரூரில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் துவங்கிய மழை அதிகாலை 5 மணி வரையில் விடிய விடிய கொட்டி தீர்த்தது. நேற்று பகல் நேரத்திலும் இந்த மழை பெய்தது. இதன் காரணமாக திருவாரூர் பேருந்து நிலையம் உட்பட நகரின் பல்வேறு இடங்களில் நேற்று மழை நீர் குளம் போல் தேங்கியது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. நேற்று ஞாயிற்று கிழமை விடுமுறை தினம் என்பதால் வீட்டிற்குள்ளே மக்கள் முடங்கினர். இதன் காரணமாக தீபாவளி நெருங்கி வரும் நேரத்தில் கடைத்

தெருவில் கூட மக்கள் நடமாட்டம் குறைவாக காணப்பட்டது. இதன் காரணமாக கடை வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பொது மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் இந்த மழை பாதிப்பை ஏற்படுத்தினாலும் விவசாயிகளுக்கு கை கொடுக்கும் மழையாக இருந்து வருவதால் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியில் இருந்து வருகின்றனர். மாவட்டத்தில் 3 லட்சத்து 66 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி நடைபெற்றுள்ள நிலையில் நீரில்லாமல் காய்ந்த நிலையில் இருந்த பயிர்களுக்கு இந்த மழையானது வரபிரசதமாக இருந்து வருகிறது. மேலும் குடிநீர் போர்வெல்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருவதுடன் குளம் குட்டைகளும் நிரம்பி வருகிறது.

**<u>வடகிழக்கு பருவமழை துவக்கம் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக கன மழை பெய்து வருகிறது. மூன்று ஆண்டுகளுக்கு பிறகு தொடர்ந்து மழை பெய்து வருவதால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மாவட்டம் முழுவதும் பொதுப்பணித்துறை கண்மாய்கள் 716, ஒன்றிய கண்மாய்கள் 4188 உள்ளன. கடந்த 2011ம் ஆண்டு முதல் மாவட்டம் முழுவதும் போதிய மழை இல்லாமல் கடும் வறட்சி நிலவியது. இதனால் விவசாயம், குடிநீர் தேவைகளுக்கு நீர் இல்லாமல் கண்மாய், குளங்கள் முழுமையாக வறண்டு காணப்பட்டது. விவசாயம் செய்த பயிர்கள் அனைத்தும் கருகியது. ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகளுக்கு தீவனம் இன்றி வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்நிலையில் கடந்த மாதம் மாவட்டத்தின் சில பகுதிகளில் கன மழை பெய்தது. இந்த மாத தொடக்கத்தில் இருந்து மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் கன மழை பெய்ய தொடங்கிய நிலையில், கடந்த மூன்று நாட்களாக பகல் மற்றும் இரவு நேரங்களில் விடாமல் சாரல் மழையும், கன மழையும் பெய்து வருகிறது. 18ம் தேதி நிலவரப்படி மாவட்ட முழுவதும் 173.7மி.மீ

பதிவானது. அதிகபட்சமாக திருப்புவனத்தில் 60.8மி.மீ மழை பதிவானது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி மாவட்ட முழுவதும் 223.2மி.மீ மழை பதிவானது. அதிகபட்சமாக இளையான்குடியில் 59மி.மீ மழையும், குறைந்தபட்சமாக திருப்பத்தூரில் 8 மி.மீ மழையும் பதிவானது. திருப்புவனத்தில் 40.6மி.மீ, மானாமதுரையில் 40மி.மீ, சிவகங்கையில் 34மி.மீ, தேவகோட்டையில் 27.2மி.மீ, காரைக்குடியில் 14.4மி.மீ மழை பதிவாகியுள்ளது. மாவட்டம் முழுவதும் சராசரியாக 31.8மி.மீ மழை பெய்துள்ளது. இதனால் குளங்கள், கண்மாய்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு பிறகு பெய்துவரும் தொடர்மழையால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். விவசாயிகள் கூறுகையில்,'தற்போது பெய்துள்ள மழையால் விவசாய பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கன மழை பெய்தால் கண்மாய்களுக்கு நீர் வரத்து அதிகரிக்கும். மூன்று ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டு விவசாயம் செழிக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றனர். பொதுமக்கள் கூறுகை யில்,'இரண்டு நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. எங்கும் செல்ல முடியவில்லை. ஆனாலும் மழையே இல்லாமல் மூன்று ஆண்டுகளாக கொளுத்தும் வெயிலால் கடுமையாக பாதிக்கப்பட்டதால் எவ்வளவு மழை வேண்டுமானாலும் பெய்யட்டும் என்ற எண்ணமே ஏற்படுகிறது. இப்பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் குளத்து நீரே குடிநீராக பயன்பட்டு வருகிறது. குளங்களில் நீர் இல்லாமல் குடிநீருக்கு சிக்கல் ஏற்பட்ட நிலையில் தற்போதைய மழையால் வரும் 2015ம் ஆண்டு கோடைகாலத்தில் குடிநீர் பிரச்னை ஏற்பட வாய்ப்பில்லை என்று தெரிவித்தனர்.

## கழுகுமலையில் தொடர் மழை கழுகாசலமூர்த்தி கோயில் தெப்பம் 3 ஆண்டுக்கு பின் நிரம்பியது விவசாயிகள் மகிழ்ச்சி

கழுகுமலை, : கழுகுமலையில் பெய்த பலத்த மழையால் 3 ஆண்டுகளுக்கு பின் கழுகாசலமூர்த்தி கோயில் தெப்பம் பெருகி யது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கழுகுமலையில் கடந்த 3 வருடமாக மழை பெய்யாததால் இங்குள்ள கண்மாய்கள், குளங்கள் வறண் டன. பெரும்பாலும் வானம் பார்த்த பூமி என்பதால் மழையை நம்பித்தான் விவசாய தொழில் செய்ய வேண்டியுள்ளது. மழை பெய்யாததால் விவசாய தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டது. பெரும்பாலான விவசாயிகள் தொழிலை விட்டு விட்டு வேறு வேலைக்கு செல்லும் அவலநிலை ஏற்பட்டது. மழை பெய்ய வேண்டி சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டது. இந்நிலையில் இந்தாண்டு மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் கழுகுமலை மற்றும் சுற்றியுள்ள 30க்கும் மேற் பட்ட கிராம விவசாயிகள் நிலங்களை உழுது பண்படுத்தி மக்காச்சோளம், பாசிபயறு, உளுந்து விதை களை விதைத்து மழைக்காக காத்திருந்தனர். கடந்த வாரங்களில் பெய்த 2 மழையால் மக்காச்சோளம், பாசிபயறு, உளுந்து செடிகள் ஓரளவிற்கு வளர்ந்துள்ளன. தற்போது பெய்து வரும் தொடர் மழையால் இப்பகுதிகளில் உள்ள குளங்கள், தெப்பம், கண்மாய்களில் நீர் வரத்து அதிகரித்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மழையால் மரிச்சுக்கட்டு கண்மாய் வழியாக பெருகிய நீர் சுரங்க பாதை வழியாக கழுகாசலமூர்த்தி கோயில் தெப்பத்தில் கல்லால் அமைக்கப்பட்டுள்ள பசு வாய் பகுதி வழியாக வந்து கொண்டிருக்கிறது. தண்ணீர் விழும் பகுதியில் விநாயகரின் சிலை உள்ளது. தற்போது பசு வாய் வழியாக சீறிப்பாய்ந்து வரும் தண்ணீரை இப்பகுதி மக்கள் ஆர்வத்துடன் பார்த்து செல்கின்றனர். 40 அடி ஆழமுள்ள தெப்பத்தில் உள்ள நீரைத்தான் இப்பகுதி மக்கள் குடிநீராக பயன்படுத்தி

வந்தனர். முன்பு சுவாமிக்கு அபிஷேகத்திற்கு தெப்ப நீரை பயன்படுத்தினர். இந்த மழையால் இப்பகுதியில் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது.

**செம்பரம்பாக்கம் ஏரி நீர் மட்டம் உயர்வு**

பூந்தமல்லி, : செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர் வரத்து அதிகரித்து வருவதால் அதன் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. பூந்தமல்லி அடுத்த செம்பரம்பாக்கம் ஏரியில் மொத்த கொள்ளளவு 3645 மில்லியன் கனஅடி. தற்போது பெய்த மழையினால் 1001 மில்லியன் கனஅடியாக ஏரியின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. கிருஷ்ணா நதி நீரும், தற்போது பெய்து வரும் மழையினால் வருகிற நீரும் சேர்ந்து, விநாடிக்கு 619 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து மழை பெய்தால் நீர் மட்டம் மேலும் உயர வாய்ப்பிருக்கிறது.

**கலசபாக்கம் அருகே நடவு துவரை சாகுபடி செயல் விளக்க கூட்டம்**

கலசபாக்கம், :தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நடவு முறையில் துவரை சாகுபடி செய்வது குறித்த செயல் விளக்க கூட்டம் நடைபெற்றது. கலசபாக்கம் ஒன்றியத்தில் வேளாண்மை துறை மூலம் 2014-2015ம் ஆண்டுக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நடவு முறையில் துவரை சாகுபடி செய்வதற்கு பத்தியவாடி, அணியாலை ஆகிய கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. இது குறித்த செயல்விளக்க கூட்டம் பத்தியவாடி கிராமத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் செ.சுந்தரம் தலைமை தாங்கி பேசியதாவது: இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு 100 சதவிகித மானிய விலையில் விதை, பாலிதீன் கவர், மற்றும் இதர பயிர் பாதுகாப்பு ஈடுபொருட்கள் வழங்கப்படுகிறது. மேலும் சொட்டுநீர் பாசன வசதி அமைத்து தரப்படுகிறது. விவசாயிகள் கார்த்திகை பட்டம் நடவு செய்யும் போது துவரை விதைகளை பாலிதீன் கவரில் விதைத்து 35 நாட்களுக்குள் நாற்று தயார் செய்ய வேண்டும். பின்னர் அந்த

நாற்றுகளை நடவு செய்ய வேண்டும் என்றர். இதனை தொடர்ந்து கலசபாக்கம் ஒன்றியம் வன்னியனூர் கிராமத்தில் ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை திட்டத்தின் கீழ் தரிசு நிலத்தில் அமைக்கப்பட்ட பண்ணை குட்டையை வேளாண்மை உதவி இயக்குநர் சுந்தரம் மற்றும் வேளாண்மை அலுவலர் சுப்பிரமணி ஆய்வு செய்தனர். கலசபாக்கம் அடுத்த பத்தியவாடி கிராமத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நடவு துவரை சாகுபடி செயல் விளக்க கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் செ.சுந்தரம் பேசினார்.

## உடுமலையில் தொடர் மழை அமராவதி பாசன பகுதியில் நெல்சாகுபடி தீவிரம்

உடுமலை, : உடுமலை பகுதியில் கனமழை பெய்து வருவதையடுத்து, அமராவதி பாசன பகுதியில் நெல் சாகுபடியில் விவசாயிகள் தீவிரம் காட்டியுள்ளனர்.உடுமலை, மடத்துக்குளம் தாலுகா பகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய மழை பெய்யாததால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. அமராவதி அணையால் பாசன வசதி பெறும் பழைய ஆயக்கட்டு பகுதியில் நெல் பயிரிட விவசாயிகள் தயக்கம் காட்டி வந்தனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதையடுத்து, நெல், கரும்பு பயிரிடும் ஆயத்த வேலையில் ஈடுபட்டுள்ளனர். தற்போது வயல்கள் தோறும் உழவு பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மேலும், உடுமலை நகரில் பெய்யும் தொடர் மழையால் வீதிகளில் மழை வெள்ளமும், சாக்கடையும் கலந்து ஓடுவதால் மக்கள் அவதிப்படுகின்றனர். பாதாள சாக்கடை திட்டத்துக்காக தோண்டப்பட்ட குழிகள் சரியாக மூடப்படாததால் இரு சக்கர வாகனங்களில் செல்வோர் கடும் சிரமத்துக்குள்ளாகி உள்ளனர். போக்குவரத்து நெரிசலும் அதிகமாகியுள்ளது. இந்த தொடர் மழை காரணமாக தீபாவளி விற்பனை மந்தமாக உள்ளது. ஜவுளி, பட்டாசு,

பலகார கடைகள் வெறிச்சோடி கிடக்கின்றன. இதனால் வியாபாரிகள் கவலையடைந்துள்ளனர்.

## வறண்ட அமராவதி ஆற்றில் தொடர் மழையால் வெள்ளம் விவசாயிகள் மகிழ்ச்சி

கரூர், : தொடர்மழை காரணமாக வறண்டு கிடந்த அமராவதி ஆற்றில் நீர்வரத்து உள்ளது. திருப்பூர் மாவட்டம் உடுமலையில் அமராவதி அணை உள்ளது. அணை யின் உயரம் 90அடி. கரூர் மாவட்டத்தில் அமராவதி நீரைப்பயன்படுத்தி சுமார் 40ஆயிரம் ஏக்கர் பாசனவசதி பெறுகிறது. பழைய ஆயக்கட்டுப்பகுதிகள், புதிய ஆயக்கட்டுப்பகுதிகள், நீரேற்றுப்பாசன பகுதிகள் உள்ளன. மேலும் உள்ளாட்சி மன்றங்களின் குடிநீர் கிணறுகளும் அமராவதி அணை நீரைநம்பி நீரேற்றம் செய்து கொண்டிருக்கின்றன. அமராவதி அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது. அணை நீர் தவிர மழைநீர்வரத்தும் வர ஆரம்பித்துள்ளது. கடந்த 4 நாட்களாக கரூர் மாவட்ட பகுதியில் மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் அமராவதி ஆற்றில் தண்ணீர் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. எப்போதும் வறண்டு காண ப்படும் அமராவதி ஆற்றில் தற்போது தொடர்ந்து தண் ணீர் வந்து கொண்டுள்ளது. அமராவதி அணைநீர் சிறிதளவே திறக்கப்பட்டிருப்பதால் பாசன வாய்க்கால்களுக்கும் அந்த நீர் செல்கி றது. அவ்வப்போது தண்ணீ ர் வருவதும் பின்னர் வறண் டு காணப்படுவதுமான நி¬ ல ஒரு மாதமாக இருந்தது. செட்டிபாளையம் தடுப்பணைக்கு அமராவதி நீர்வந்து அங்கிருந்து கரூர், பாலம்மாள்புரம். மேலப்பாளையம் பகுதி வழியாக கடைமடை பகுதியான திருமுக்கூடலூர் செல்கிறது. அங்குள்ள காவிரியாறில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களில் உபரிநீர் கலக் கும். அணையில் தண்ணீர் திறக்காத நிலையில் வற்றிக்காணப்படும் செட்டிபாளையம் தடுப்பணையிலும் தற்போது நீர் வரத்து உள்ளது. இங்குள்ள ரெகுலேட்டர்கள் மூலமாக பாசன

வாய்க்கால்களுக்கு தண்ணீர் பிரித்து அனுப்பப்படுகிறது. மழை காரணமாக தொடர்ந்து அமராவதி ஆற்றில் நீர்வரத்து இருப்பதால் விவசாயிகளும் பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அமராவதி ஆற்றுப்படுகையில் சுமார் 30 உள்ளாட்சி நிர்வாகங்கள் குடிநீர் கிணறு களை ஆங்காங்கே ஏற்படு த்தி பொதுமக்களுக்கு குடிநீ ர் விநியோகம் செய்கின்றனர். நீர்ஆதாரம் இன்றி காணப்பட்ட குடிநீர் கிணறுகளுக்கும் இப்போது தண் ணீர் கிடைத்து வருகிறது. இதுகுறித்து விவசாயி ராமசாமி கூறுகையில். பள்ளபாளையம் ராஜவாய்க்காலில் ஏற்கனவே இருந்த பாசனபகுதிகளுடன், 1990ம் ஆண்டு பள்ளபாளையம், விஸ்வநாதபுரி, ஆண்டாங்கோயில், எல்என்சமுத்திரம், கரூர், பஞ்சமாதேவி கோயம்பள்ளி, சோமூர், அச்சமாபுரம், ஆகிய 9 கிராமங்களும் பயன்படுகின்ற வகையில் தேசியநீர் மேலாண்மை திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டது. இந்த வாய்க்கால் மூலம் 2292 எக்டேர் விளை நில்ங்கள் பாசன வசதி பெற்று வந்தன. தொடர்ந்து நீர்வரத்து இருந்தால் சாகு படி பணிகளை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என்றார்.

## <u>கரூரில் 3 நாளில் 625.40 மிமீ மழை</u>

கரூர்,: வங்கக் கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக கரூர் மாவட்டத்தில் கடந்த 3 நாட்களில் 625.40 மிமீ மழை பெய்துள்ளது. கோடை மழை மற்றும் தென்மேற்கு பருவமழை ஆகிய முக்கிய மழைக்காலங்கள் கரூர் மாவட்டத்தில் குறிப்பிட்ட அளவு பெய்யாமல் இருந்தது. இதனால், அனைத்து தரப்பு மக்களும் கடுமையாக அவதிப்பட்டு வந்தனர். மேலும், வரவுள்ள வடகிழக்கு பருவமழை காலத்திலாவது அதிக மழையை இந்த மாவட்டம் பெறுமா? என அனைவரும் எதிர்பார்த்த நிலையில் வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டது. இதனால், தமிழகத்தில் முன்னதாகவே வடகிழக்கு பருவமழை துவங்கி விட்டதாக வானிலை மையமும் அறிவித்தது. அதன்படி,

கடந்த 3 நாட்களாக தமிழகம் முழுதும் பலத்த மழை பெய்து வருகிறது. இதன் எதிரொலியாக கரூர் மாவட்டத்திலும் ஒரளவு நல்ல மழை பெய்து அனைவரையும் மகிழ்வித்தும், குளிர்வித்தும் வருகிறது. அந்த வகையில், கரூர் மாவட்டத்தில் 18ம் தேதி 373 மிமீ, 19ம் தேதி 97.20 மிமீ, 20ம் தேதி 155.20 மிமீ என மூன்று நாட்களில் 625.40 மிமீ மழை பெய்துள்ளது. இதன் மொத்த சராசரி மழையளவு 52.11 ஆகும். மேலும் இரண்டு நாட்களுக்கு மழை நீடிக்கும் என வானிலை அறிவித்துள்ளது.

## <u>நாட்டுக்கோழி வளர்ப்பு இலவச பயிற்சி முகாம் பங்கேற்க அழைப்பு</u>

கரூர்,: பண்டுதகாரன்புதூரில் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த இலவச பயிற்சி முகாம் நடைபெறுகிறது. இதில் பங்கேற்பவர்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம். இது குறித்து கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற் றும் ஆராய்ச்சி மைய இணைப்பேராசிரியர் அகிலா விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கரூர் மாவட்டம் பண்டுதகாரன்புதூரில் உள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் இந்தி யன் ஒவர்சீஸ் வங்கியின் ஊரக தொழில் முனை வோர் பயிற்சி மையத்தின் நிதியுதவியுடன் லாபகரமான நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சி அக்டோபர் 27ம்தேதி முதல் நவம்பர் 1ம்தேதி வரை ஆறு நாட்களுக்கு நடைபெறுகிறது. இந்த பயிற்சியில் அறிவியல் ரீதியான பராமரிப்பு முறை கள், கொட்டகை அமைப்பு, தீவன பராமரிப்பு, நாட்டுக்கோழிகளை தாக்கும் நோய்கள் மற்றும் அவற்றை தடுக்கும் முறை கள், மர புசாரா மருத்துவ முறைகள், குடற்புழு நீக்கம், தடுப்பூசி அளித்தல், விற்பனை உத்திகள் மற்றும் பண்ணைப் பொருளாதாரம் ஆகிய தலைப்புகள் குறித்து பல்கலைக் கழக பேராசிரியர்களால் நடத்தப்படவுள்ளது. பயிற்சியாளர்களுக்கு கையேடு, தேநீர் மற்றும் மதிய உணவும் வழங்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் அலுவலக தொலை பேசி எண்ணை (04324- 294335)

தொடர்பு கொ ண்டு விரைந்து முன்பதிவு செய்து கொள்ளுமாறும், மேலும் 6 நாட்களும் தவறாமல் பயிற்சி மையத்திற்கு வர வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடப்பு சம்பா சாகுபடியில் களைகளை கட்டுப்படுத்தலாம் வேளாண் அதிகாரி தகவல்

அறந்தாங்கி, : நடப்பு சம்பா சாகுபடியில் களை களை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து ஆவுடையார்கோவில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் அடைக்கப்பன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் தற்பொது வடகிழக்கு பருவமழை பரவலாக பெய்து வருகிறது. இதனை பயன்படுத்தி ஆவுடையார்கோவில் வட்டார வேளாண்மை விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இப்பகுதியில் களைகளை கட்டுப்படுத்துவது விவசாயிகளிடையே பெரும் சவாலாக உள்ளது. மேலும் சரியான நேரத்தில் களைகளை கட்டுப்படுத்தவில்லையென்றால் களைகள் பயிருக்கு சமமாக வளர்ந்து 5 முதல் 50 சதவிகிதம் வரை உற்ப்பத்தியை குறைப்பதோடு நீர்த்தேவையை அதிகரிக்க செய்கிறது. ரகங்களின் துர்யமையை பாதிக்கிறது. பூச்சிகள், பூஞ்சான், ஒட்டுண்ணிகள் பரவுவதற்கும் காரணமாகிறது. நடப்பு சம்பா சாகுபடி விவசாயத்தில் களைகளை கட்டுப்படுத்துவதற்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மானிய விலையில் களைக்கொல்லி ஆவுடையார்கோவில் வட்டார வேளாண் விரி வாக்க மையத்தில் வினியோ கம் செய்யப்பட்டு வருகிறது. களை முளைப்பதற்கு முன்பு பூட்டாகுளோர் அல்லது அனிலோபாஸ் மருந்தினை உலர் மணலுடன் கலந்து வயலில் தூவவேண்டும். களை முளைத்தபின் நெல் வயலில் மாச்சோ (பிஸ்பைரிபாக் சோடியம்) 80 மிலி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் நன்கு கலந்து நேரடி நெல் விதைப்பு வயலில் நெல் விதைத்த பின்பு மழை பெய்தவுடன் வயலில் சிறிதளவு நீர்

நிறுத்தியும், நன்கு ஈரப்பதம் இருக்கும் போதும் களைக்கொல்லியை கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவேண்டும். மேலும் களைக்கொல்லியானது அனைத்து வகையான புற்கள், அகன்ற இலைச்செடிகள் ஆகியவற்றை கட்டுப்படுத்தும். களைக்கொல்லி உபயோகத்திற்கு முன்பாக அதிகமாக தண்ணீர் தேங்கினால் வடித்துவிடவேண்டும். உபயோகத்திற்கு பிறகு மூன்று அல்லது நான்கு நாட்களாவது அப்படியே தண்ணீரை பராமரிக்கவேண்டும். மேலும் களைக்கொல்லி உபயோகப்படுத்தும்போது களைக்கொல்லி கலன், அதன் தயாரிப்பு, காலாவதி நாளை தெரிந்து கொள்ளவேண்டும். பயன்படுத்துவதற்கு முன்பு அதன் வழிமுறைகளை படித்து தெரிந்து கொள்வது மிக அவசியமாகும். மேலும் தேவையான பாதுகாப்பான உடையை அணிந்து கொள்ளவேண்டும். ஆவுடையார்கோவில் வட்டார வேளாண் விரி வாக்க மையத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானிய விலையில் நெட்டை ரக தென்னங்கன்றுகள் இருப்பில் உள்ளன. தற்போது உள்ள ஈரப்பதத்தை பயன்படுத்தி தென்னங்கன்று நடவுச் செய்வும் விவசாயிகள் ஆவுடையார்கோவில் வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி பெற்று பயனடையலாம் என்றார்.

## <u>பண்ணை மகளிர் குழு தொடக்க விழா</u>

சீர்காழி, : நாகை மாவட்டம்சீர்காழி அருகே அகணி கிராமத்தில் அம்மா பண்ணை மகளிர் குழு துவக்க விழா நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர் வெற்றிவேலன் தலைமை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குநர் கணேசன் முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் எழில்ராஜா வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குநர் வெற்றிவேலன் புதிய அம்மா பண்ணை மகளிர் குழுவை துவக்கி வைத்து பேசுகை யில், பெண்கள் குழு அமைத்து சேமிப்பை ஊக்கப்படுத்தும் தொழில் சார்ந்த பயிற்சிகள் பெற்று அதன் மூலம் வருமானத்தை பெருக்கிக் கொள்ள வேண்

டும். அதனடிப்படையில் அகணியில் அம்மா பண்ணை மகளிர்குழு அமைக்கப்பட்டு வேளாண்மைதுறை சார்பில் வேளாண் இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப் படும் என்றார். இதில் குழுத்தலைவராக கஸ்தூரி, செயலாளராக தேன்மொழி, பொருளாளராக ராஜேஸ் வரி ஆகி யோர் தேர்வு செய்யப்பட்டனர். ஏற்பாடு களை உதவி வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன் செய்திருந்தார்.

**நடப்பு சம்பா பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை அழிக்க தொழில்நுட்ப ஆலோசனை வேளாண். பேராசிரியர்கள் தகவல்**

நாகை, :நாகை மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள நடப்பு சம்பா மற்றும் தாளடி நெற்பயிரில் தற்போது நிலவி வரும் வானிலை காரணமாக சாறு உறிஞ்சும் பூச்சிகள் தாக்க வாய்ப்புகள் உள்ள தால் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை சிக்கல் வேளாண். அறிவியல் நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர்கள் முனைவர் இளையபாரதி, முனைவர் அழகர், பேராசிரிரியர் மற்றும் தலைவர் முனைவர் ராஜேந்திரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து பேராசிரியர்கள் கூட்டாக விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: நாகை மாவட்டத்தில் கீழ்வேளூர், கீழையூர், தலைஞாயிறு, வேதாரண்யம் ஆகிய வட்டாரங்களில் நேரடி நெல் விதைப்பு செய்த வயல்களில் நெல் மாவுப்பூச்சி, புகையான், பச்சைத்தத்துப்பூச்சிகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. இவ்வகை பூச்சியின் இளம் குஞ்சுகள் பயிரின் சாற்றை பயிரின் தொண்டை பகுதியில் அமர்ந்து கொண்டு உறிஞ்சுதால் பூச்சி தாக்கப்பட்ட பயிர்கள் வளர்ச்சி குன்றி நோய் தாக்கப்பட்ட பயிர்களை போன்று தனிப்பட்ட குத்துக்களாக காணப்படும். அதிக எண்ணிக்கையிலான பூச்சிகள் இலை உறைக்குள்ளே தங்கிக் கொண்டு சாற்றை உறிஞ்சுவதால் இலையுறைகளின் வெண்மை நிற மெழுகு போன்று இப்பூச்சியின் காய்ந்த தோல்கள் காணப்படும். இப்பூச்சியின் தாக்குதலை சூரை என்றும் அழைப்பார்கள். இதை கட்டுப்படுத்த டைமித்யோயிட் 400 மி.லி.

மருந்துடன், 200 மி.லி. அசாடிராக்டின் (10,000 பிபிஎம்) கலந்து கட்டுப்படுத்தலாம். அல்லது பியூப்ரோபெசின் என்ற தோலுரி தடுப்பானை ஏக்கருக்கு 330 மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். அல்லது தயாமித்தாக்ஸாம் என்ற பூச்சிக்கொல்லியை ஏக்கருக்கு 100 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீர் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். சீர்காழி, குத்தாலம், செம்பனார்கோவில், தலைஞாயிறு ஆகிய வட்டாரங்களில் நடவு செய்யப்பட்ட வயல்களில் இலைமடக்குபுழு, குருத்துப்பூச்சி தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த மண்ணில் அதிகஅளவு தழைச்சத்து இடுவதை தவிர்த்து பரிந்துரைக்கப்பட்ட தழைச்சத்தை 3 முதல் 4 முறையாக பிரித்து இடுவதால் இப்பூச்சியின் தாக்கத்தை குறைக்கலாம். மேலும் நிழல்படும் இடங்களில் தாக்குதல் அதிகமாவதால் அவ்விடங்களில் கூடுதல் பாதுகாப்பு அவசியம். பொருளாதார சேத நிலை தாண்டி இருந்தால், பூச்சிக்கொல்லி மருந்துகளான கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 400 கிராம், புளுபெண்டி அமைடு 30 மி.லி., புரோபனோபாஸ் 500 மிலி, இவற்றில் ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில்கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளித்து கட்டுப்படுத்தலாம். குருத்துப்பூச்சி தாக்கப்பட்ட இளம் பயிரில் நடுக்குருத்தின் இலை காய்ந்து அழுகி காணப்படும். அவ்வாறு காய்ந்த நடுக்குருத்தை அல்லது முதிர்ந்த பருவத்தில் தோன்றும் வெண்கதிரை கைகளால் பிடுங்கினால் எளிதில் வந்துவிடும். முதிர்ந்த பருவத்தில் கதிர்கள் பதராகி வெண்மை நிறமாக மாறிவிடும். இதை வெண்கதிர்கள் என்பார்கள். பயிர் முழு வளர்ச்சி அடையும்போது இப்பூச்சி தாக்கினால் இலையுரை பாதிக்கப்பட்டு கதிர்கள் பதராகி வெண்கதிர்களாகி விடும். இதை கட்டுப்படுத்த, ஏக்கருக்கு ஒன்று என்ற எண்ணிக்கையில் விளக்கு பொறி வைத்து அந்துப்பூச்சியின் நடமாட்டத்தை

கண்காணிக்கலாம். ஏக்கருக்கு 4 அல்லது 5 என்ற எண்ணிக்கையில் இனக்கவர்ச்சி பொறி வைத்து தாய் அத்துப்பூச்சியை பிடித்து அழிக்கலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

**மானிய விலையில் தீவனம் கால்நடைத்துறை அறிவிப்பு**

குன்னூர், : குன் னூரில் மானிய விலையில் உலர் தீவனங்கள் வழங்கப்படுவதாக கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. பால் உற்பத்தியை பெருக்கவும், கால்நடைகளின் பராமரிப்பு செலவை குறைக்கவும் சோளம், தட்டை பயிர், அகத்தி, அசோலா ஆகியவற்றை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கால்நடைகள் வைத்துள்ளவர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கும்போது, ஆவின் சார்பில் தீவனங் கள் வழங்கப்பட்டு வந்தது. தற்போது சில காரணங்களால் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இந்நிலையில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் மீண்டும் தீவன அபிவிருத்தி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் குன்னூர் பகுதியில் இதுவரை 60 பயனாளிகளுக்கு தீவனங்கள் வழங்கப்பட்டுள்ளன. உலர் தீவனமான சோள தட்டு உள்ளிட்டவை ஒரு பயனாளிக்கு 105 கிலோ வீதம் மானிய விலையில் கிலோ ரூ.2 க்கு வழங்கப்படுகிறது. ஆகவே 5 மாடுகள் வரை வைத்துள்ளவர்கள் குடும்ப அட்டை நகல் இணைத்து விண்ணப்பித்தால் மானிய விலையில் உலர் தீவனங்கள் வழங்கப்படும் என்று கால்நடை பராமரிப்பு துறை மருத்துவர் சங்கர் தெரிவித்துள்ளார்.

**பசுந்தேயிலை விலை சரிவை ஈடுகட்ட விவசாயிகளுக்கு ரூ14.89 லட்சம்**

மஞ்சூர், : பசுந்தேயிலை விலை சரிவை ஈடுகட்டும் வகையில் மஞ்சூர் கூட்டுறவு ஆலை விவசாயிகளுக்கு ரூ.14.89 வழங்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயம் பிர தான தொழிலாக உள்ளது.

மாவட்டம் முழுவதும் சுமார் 65 ஆயிரம் விவசாயிகள் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதை முன்னிட்டு 15 கூட்டுறவு தொழிற்சாலைகளும் நூற்றுக்கும் மேற் பட்ட தனியார் ஆலை களும் இயங்கி வருகிறது. இதில் கூட்டுறவு ஆலை களில் மட்டும் 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்நிலையில் கடந்த சில மாதங்களாக பசுந்தேயிலையின் விலை படிப்படியாக குறைந்து தற்போது கிலோவிற்கு ரூ.6 முதல் ரூ.7 வரை மட்டுமே கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் தங்களது தேவை களை பூர்த்தி செய்ய முடியாமலும், தோட்ட பராமரிப்பு மற்றும் தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்க முடியாமலும் தவித்து வருகின்றனர். விவசாயிகளின் பொருளாதார நிலை கருதி பசுந்தேயிலைக்கு மானியம் அல்லது கூடுதல் விலை வழங்க வேண்டும் என கோரிக்கை விடப்பட்டது. இதையடுத்து தமிழக அரசு பசுந்தேயிலையின் விலை சரிவை ஈடுகட்டும் வகை யில் கூடுதல் விலை வழங்க நடவடிக்கை எடுத்தது. இதற்காக அரசு தரப்பில் ரூ.8 கோடியும், இன்ட்கோ சர்வ் நிர்வாகத்தின் சார்பில் ரூ.4 கோடியும் என மொத்தம் ரூ.12 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. இந்த நிதியின் மூலம் கூட்டுறவு தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளுக்கு கடந்த ஜூலை மாதம் முதல் அவர்கள் வினியோகித்த பசுந்தேயிலையின் கணக்குப்படி கிலோவிற்கு 2 ரூபாய் கூடுதல் விலையாக வழங்கப்படும் என குன்னூர் இன்ட்கோசர்வ் சேர்மன் சிவக்குமார் தெரிவித்தார். அதன்படி மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையின் விவசாய உறுப்பினர்களு க்கு பசுந்தேயிலைக்கான கூடுதல் விலை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொழிற்சாலை வளாகத்தில் நடந்த இந்நிகழ்ச்சிக்கு நிர்வாககுழு தலைவர் பீலன், துணைத்தலைவர் ராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சுமார் ஆயிரத்து 700 விவசாய உறுப்பினர்களுக்கு கூடுதல் விலை ரூ.14 லட்சத்து

89 ஆயிரத்தை தொழிற்சாலை மேலாண்மை இயக்குனர் அருணாச்சலம் வழங்கினார்.

## சூரியகாந்தி சாகுபடி தீவிரம் பூஞ்சான நோயை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் வல்லுனர் ஆலோசனை

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் சூரியகாந்திசாகுபடி தீவிரமடைந்துள்ளது. பூஞ்சான நோயை கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் தொழில்நுட்ப வல்லுனர் ஆலோசனை தெரிவித்துள்ளார். அரியலூர் மாவட்டத்தில் சூரியகாந்தி சாகுபடி பணியை விவசாயிகள் தீவிரப்படுத்தி வருகின்றனர். சூரியகாந்தி சாகுபடி 58 எக்டேர் பரப்பளவில் விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். இதில் அரியலூர் ஒன்றியத்தில் புங்கன்குழி, ஓரியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 30 எக்டேர், திருமானூர் இலந்தைக்கூடம், சுள்ளங்குடி, விழுப்பணங்குறிச்சி ஆகிய பகுதிகளில் 22 எக்டேர், தா.பழூர் ஒன்றியத்தில் கடம்பூர், முட்டுவாஞ்சேரி, கோவிந்தப்புத்துீர் ஆகிய பகுதிகளில் 5 எக்டேர், ஆண்டிமடத்தில் 2 எக்டேர் அளவில் என 58 எக்டேர் அளவில் விவசாயிகள் இப்பயிரை பயிரிட்டு வருகின்றனர். கடந்த ஆடி மற்றும் கார்த்திகை பட்டத்தில் சூரியகாந்தி பயிரிட்டு தற்போது அறுவடை செய்து பணியை முடுக்கி விட்டுள்ளனர். இதுகுறித்து சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் ராஜ்கலா தெரிவித்ததாவது: சூரியகாந்தி பயிர் செய்வதற்கு ஏற்ற பருவம் மானாவாரி பயிருக்கு ஆடி மற்றும் கார்த்திகை பட்டம், இறவை பயிருக்கு மார்கழி மற்றும் சித்திரை பட்டம் உகந்தது. மானாவரி சாகுபடிக்கு விதையளவு ஒரு ஏக்கருக்கு 3 கிலோ மற்றும் இறவைக்கு 2 கிலோ போதுமானது. விதைகள் மூலம் பரவும் பூஞ்சான நோயை கட்டுப்படுத்த விதைநேர்த்தி மிகவும் அவசியம். ஒருகிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனஸ் புளோரசன்ஸ்

கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். அடி உரம் மண் பரிசோதனை அடிப்படையில் இட வேண்டும். அதனுடன் 1 கிலோ வீதம் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, டிரைகோடெர்மா விரிடி, சூடோமோனஸ் புளோரசன்ஸ் கலந்து இட வேண்டும். சூரிய காந்தி சாகுபடியில் மகசூலை அதிகப்படுத்த விதைப்பதற்கு முன்பாக நுண் சத்து உரம் 5 கிலோவை போதுமான மணலில் கலந்து வயலில் தூவி விட வேண்டும். பிறகு நட்ட 30, 40 மற்றும் 50 வது நாளில் ஏக்கருக்கு 500 கிராம் துத்தநாக சல்பேட் மற்றும் மாங்கனிசு சல்பேட் தெளிக்க வேண்டும். இதனை 1 லிட்டருக்கு 5 கிராம் வீதம் கலந்து கொள்ள வேண்டும். பெண் பூக்கள் விரியும் தருணத்தில் 400 கிராம் போராக்ஸ் தெளிக்க வேண்டும். இதனை 1 லிட்டர் நீருக்கு 2 கிராம் வீதம் கலந்து தெளிக்க வேண்டும் இவ்வாறு தெளிப்பதனால் மணிகள் நன்றாக பிடிக்க உதவும். மேலும் மகரந்த சேர்க்கை ஏற்படும் தருணமான காலை 9 மணி முதல் 11 மணிக்குள் மெல்லிய துணி கொண்டு பூவின் மேல்பாகத்தை 2 நாட்களுக்கு ஒரு முறை மெதுவாக ஒவ்வொரு பூக்கொண்டையையும் தேய்க்க வேண்டும். 10 நாட்களுக்கு 5 முறை இப்படி ஒவ்வொரு பூவிலும் செய்ய வேண்டும். அத்துடன் பூக்கள் மலரும் தருணத்தில் எக்டேருக்கு 3 பெட்டி வீதம் தேனீ வளர்த்தல் நல்ல பலன் தரும். அருகருகே உள்ள பூக்கொண்டை யினை ஒன்றோட ஒன்று முகம் சேர்ந்து லேசாக தேய்த்து விட்டாலும் சிறந்த பலனை தரும். இவ்வாறு செய்வதன் மூலம் சூரியகாந்தி சாகுபடியில் அரியலூர் மாவட்ட விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம் என்றார்.

**மாவட்டத்தில் பரவலாக நல்ல மழை ஊருணிகளில் தண்ணீர் தேங்கியது**

**93.2 மி.மீ. மழை நகரில் கொட்டியது**

ராமநாதபுரம், : ராமநாதபுரத்தில் கடந்த 3 தினங்களாக நல்ல மழைபெய்து வருகிறது. நேற்று ராமநாதபுரத்தில் அதிகபட்சமாக 93.2 மி. மீட்டர் மழை

கொட்டியது. வடகிழக்கு பருவமழை தற்போது மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்துவருகிறது. விவசாயிகள் சாகுபடி உற்சாகமாக சாகுபடி தொடங்கியுள்ளனர். பெரும்பாலான இடங்களில் மழையை தொடர்ந்து ஊருணிகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. ராமநாதபுரம் நகரில் செம்மண்குண்டு ஊருணி, சிதம்பரனார் ஊருணி, சாயக்கார ஊருணி, முகவை ஊருணி ஆகியவை தற்போது தூர் வாரப்பட்டு கரையமைக்கும் பணியில் தொண்டு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இதைத் தொடர்ந்து தற்போது பெய்துவரும் மழையினால் இவைகளில் தண்ணீர் தேங்கியுள்ளது. நேற்று முன்தினம் இரவு 7 மணி முதல் விடிவிடிய பலத்த மழை பெய்தது. இதைத்தொடர்ந்து நகரில் பிராதான பகுதிகளான அரசு மருத்துவமனை சாலை, ஓம்சக்திநகர். வசந்தநகர், காட்டுப்பிள்ளையார்கோயில், அருள்நகர், கே.கே.நகர், கோட்டைமேடு உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் ஆங்காங்கே தேங்கியது. பாரதிநகர், வசந்தநகர், ஓம்சக்திநகர் உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் செல்வதற்கு வழியில்லாமல் ஆங்காங்கே குட்டைகளாக தேங்கியுள்ளது. நேற்று காலை 8 மணி வரை ராமநாதபுரம் மாவட்டத்தில் பரவலாக பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு: ராமநாதபுரம், 93.2,. பரமக்குடி 24.2, கமுதி, 14.6., முகுதுளத்தூர் 20,. பாம்பன், 10.90, திருவாடனை. 36, தொண்டி, 66.50, தீர்த்தாண்டதானம். 66,. கடலாடி. 57.10 சராசரி மழை 646. 30 மி..மீ பெய்துள்ளது. மாவட்டத்தில் 646.30 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. நேற்று பகல் முழுவதும் மந்தாரமாக இருந்தது. ஆங்காங்கே லேசான மழை பெய்தது.

**<u>களக்காடு பகுதியில் மழை தலையணையில் தண்ணீர் வரத்து அதிகரிப்பு</u>**

களக்காடு:களக் காடு பகுதியில் பெய்து வரும் மழையினால், தலையணையில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. களக்காடு, மாவடி, டோனாவூர், திருக்குறுங் குடி மற்றும் சுற்றுபுற

பகுதிகளில் கடந்த 3 நாட்களாக மழை கொட்டி வருகிறது. பகலிலும், இரவிலும் மழை பெய்து வருகிறது. இதனால் கடந்த சில நாட்களாக நீடித்து வந்த வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டுள்ளது. மழையினால் தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. தாழ்வான பகுதிகளில் குளம் போல் தண்ணீர் தேங்கி நிற்கிறது. இதுபோல களக்காடு மேற்கு தொடர்ச்சி மலையிலும் மழை நீடித்து வருகிறது. இதையடுத்து அருவி- நீரோடைகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. களக்காடு மலையில் உள்ள செங்கல்தேரி, நெட்டேரியங்கால், முதலிருப்பான் அருவிகளில் கடும் வெள் ளம் பொங்கி பாய்கிறது. தலையணையில் தண்ணீர் அதிகரித்துள்ளது. தடுப்பணையை தாண்டி தண் ணீர் ஆக்ரோஷமாக கொட்டுகிறது. மேலும் தண்ணீர் வரத்து சீராக இல்லாமல், திடீர் என்று கூடுவதும், திடீர் என்று குறைவதுமாக உள்ளது. வழக்கமாக விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமைகளில் தலையணையில் கட்டுக்கடங்காத சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதுவது வழக்கம். ஆனால் நேற்று சுற்றுலா பயணிகள் கூட்டம் இன்றி தலையணை வெறிச்சோடி காணப்பட்டது. ஒரு சில சுற்றுலா பயணிகள் மட்டுமே வந்திருந்தனர். அவர்கள் ஆற்று ஓரமாக நின்று தலை நனைத்தனர். தீபாவளி பண்டிகை நேரம் என்பதாலும், மழை தொடர்ந்து பெய்வதாலும் சுற்றுலா பயணிகள் வருகை குறைந்திருக்கலாம் என்று வனத்துறையினர் தெரிவித்தனர். தீபாவளி முடிந்த பின் கூட்டம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தனர். தொடர் மழையினால் களக்காட் டில் ஓடும் நாங்குநேரியான் கால், பச்சையாறு, உப்பாறு ஆகிய ஆறுகளிலும், கால்வாய்களிலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்த தண்ணீர் குளங்களுக்கு திருப்பி விடப்பட்டுள்ளதால் குளங்கள் நிரம்பி வருகின்றன. திருக்குறுங்குடி பகுதி யில் பெய்து வரும் மழை யினால் நம்பியாற்றிலும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. களக்காடு பச்சை யாறு,

திருக்குறுங்குடி கொடுமுடியாறு அணை களின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.

**காலாப்பட்டு பகுதியில் தொடர் மழை**

காலாப்பட்டு, : புதுவை மற்றும் தமிழக பகுதியில் கடந்த 3 தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. காலாப்பட்டு, கனக செட்டிக்குளம், சின்ன காலாப்பட்டு, பிள்ளைச் சாவடி மற்றும் தமிழக பகுதியான கோட்டக் குப்பம், பொம்மையார் பாளையம், கீழ்புத்துப்பட்டு ஆகிய பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் பெரும் பாலானோர் மழை காரண மாக மீன்பிடிக்க கடலுக்கு செல்லவில்லை. கோட்டக்குப்பம் அடுத்த சின்னமுதலியார் சாவடி கடற்கரை பகுதியில் கடல் சீற்றமாக காணப் படுகிறது. ஏற்கனவே இப் பகுதியில் கடல் சீற்றத்தால் கடல் அரிப்பு ஏற்பட்டு வரும் நிலையில், தற்போது ஏற்பட்டுள்ள கடல் சீற்றத்தால் அதிகளவில் கடல் அரிப்பு ஏற்படும் என அப்பகுதி மீனவர்கள் அச்சத்தில் உள்ளனர். கோட்டக்குப்பம், கனகசெட்டிக்குளம், இசிஆர் சாலை மற்றும் காலாப்பட்டு காவல்நிலைய பகுதி உள்ளிட்ட இடங் களில் மழை நீர் தேங்கியுள்ள தால் பொதுமக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். ஆகையால் இப்பகுதி யில் தேங்கியுள்ள மழை நீரை அகற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கால்நடை பராமரிப்பு பயிற்சி**

புதுச்சேரி, : புதுச்சேரி அரசு கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறை சார்பில் கீழ்சாத்தமங்கலம் கிராமத்தில் கால்நடை விவசாயிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது. இயக்குனர் பத்மநாபன் அறிவுறுத்தலின் படி நடந்த சந்திப்பு நிகழ்ச்சியில் இணை இயக்குனர் மனோகரன் தலைமை தாங்கினார். டாக்டர் துளசிராமன் கன்று வளர்ப்பில் கையாள வேண்டிய நுட்பங்களை விளக்கினார். டாக்டர் ராஜிவ் கால்நடை நோய்களை தடுக்கும்

முறைகள் குறித்து விளக்கினார். கால்நடை வளர்ப்பில் லாபம் ஈட்டும் வழிமுறை குறித்து டாக்டர் கிரிமெகர்பாபா பேசினார். கால்நடை வளர்ப்பு விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளிக்கப்பட்டது. 50க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர். சிவராந்தகம் கால்நடை மருந்தக மருத்துவர் மோகன் நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காஞ்சீபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் தொடர்மழை**

காஞ்சீபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. பலத்தமழை

காஞ்சீபுரம் மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் நகரில் பல்வேறு இடங்களில் மழைநீர் ஆறு போல் ஓடியது. இந்த மழையால் பொதுமக்கள் வெப்பம் தணிந்து மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் பின்வருமாறு- கேளம்பாக்கம் -89.20 மி.மீ., மாமல்லபுரம் -63 மி.மீ., ஸ்ரீபெரும்புதூர் -44.40 மி.மீ., தாம்பரம் -39.20 மி.மீ., காஞ்சீபுரம் -26.20 மி.மீ., செய்யூர் -20.50 மி.மீ., திருக்கழுக்குன்றம் -17.80 மி.மீ., மதுராந்தகம் -10 மி.மீ., செங்கல்பட்டு -7 மி.மீ., உத்திரமேரூர் -2 மி.மீ. மழை பெய்துள்ளது.

திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த 2 நாட்களாக பல்வேறு பகுதிகளில் பரவலாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் திருவள்ளூர், மணவாளநகர், பெரியக்குப்பம், அரண்வாயல், செவ்வாப்பேட்டை, வெள்ளவேடு, கடம்பத்தூர், பேரம்பாக்கம், திருவாலங்காடு, திருப்பாசூர்,

ஈக்காடு, மப்பேடு, வேப்பம்பட்டு சுற்றுவட்டார பகுதிகளில் பெய்த மழை காரணமாக சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. திருவள்ளூர் மாவட்டத்தில் நேற்று பெய்த மழை அளவு பின்வருமாறு:-

திருவள்ளூர்- 24 மி.மீ., பொன்னேரி- 44 மி.மீ., ஊத்துக்கோட்டை- 21 மி.மீ., கும்மிடிப்பூண்டி- 44 மி.மீ., திருத்தணி- 27 மி.மீ., பூந்தமல்லி- 66 மி.மீ., அம்பத்தூர்- 18 மி.மீ., பூண்டி- 36.60 மி.மீ., செம்பரம்பாக்கம்- 64 மி.மீ., சோழவரம்- 49 மி.மீ., தாமரைப்பாக்கம்- 35 மி.மீ., ஆர்.கே.பேட்டை- 13 மி.மீ., செங்குன்றம்- 48 மி.மீ., திருவாலங்காடு- 19 மி.மீ., பள்ளிப்பட்டு- 24 மி.மீ.ஆகும்.

**குலசேகரன்பட்டினத்தில் 175 மி.மீ மழை ஆத்தூர் அருகே தடுப்பணையை தாண்டி வெள்ளம் பாய்கிறது**



தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினத்தில் 175 மி.மீட்டர் மழை பெய்து உள்ளது. ஆத்தூர் அருகே தடுப்பணையை தாண்டி வெள்ளம் பாய்கிறது.

தொடர்மழை

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதையொட்டி மாநிலம் முழுவதும் பல இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளதால், கடலோர பகுதிகளிலும், மலைப்பகுதிகளிலும் தொடர் மழை பெய்து வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மழை

பெய்து வருகிறது. அவ்வப்போது தூறலும், சாரல் மழையும் பெய்கிறது. சில நேரங்களில் பலத்த மழை பெய்கிறது. நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்வதால் ஸ்ரீவைகுண்டம் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. அதேபோல குளங்களும் நிரம்பி வருகின்றன.தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு விடிய, விடிய பலத்த மழை பெய்தது. தொடர்ந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

தூத்துக்குடியில்...

தூத்துக்குடியில் நேற்று காலை வெயில் அடித்தது. பகல் 2 மணி அளவில் மழை பெய்ய தொடங்கியது. சாரல் மழையுடன் தொடங்கியது. நேரம் ஆக, ஆக பலத்த மழையாக கொட்டியது. மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் பரவலான மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதியில் மழை வெள்ளம் தேங்கி நின்றது. தூத்துக்குடி மாவட்டத்தில் அதிகபட்சமாக குலசேகரன்பட்டினத்தில் 175 மி.மீட்டர் மழை அளவு பதிவானது. அதற்கு அடுத்தபடியாக திருச்செந்தூரில் 114 மி.மீட்டரும், குறைந்தபட்சமாக மணியாச்சி, ஸ்ரீவைகுண்டத்தில் தலா 1 மி.மீட்டரும் மழை அளவு பதிவாகி உள்ளது.

ஆறுமுகநேரி

ஆறுமுகநேரியில் கடந்த 2 நாட்களாக பலத்த மழை பெய்தது. நேற்று முன்தினம் காலையில் பெய்ய தொடங்கிய மழை நேற்று அதிகாலை வரையிலும் பெய்தது. இதனால் விவசாயிகள் விவசாய பணிகளை தொடங்கி உள்ளனர். அங்குள்ள உப்பளங்கள் தண்ணீரில் மூழ்கியதால் உப்பு உற்பத்தி முழுவதுமாக நிறுத்தப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது தான் அதிகளவு மழை பெய்ததாக அப்பகுதியினர் தெரிவித்தனர். ஆத்தூர், உடன்குடி, சாத்தான்குளம் சுற்று வட்டார பகுதிகளிலும் நேற்று முன்தினம் இரவில் பலத்த மழை பெய்தது.

திருச்செந்தூர், தென்திருப்பேரை, ஸ்ரீவைகுண்டம், ஏரல், நாசரேத், தட்டார்மடம் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவில் பரவலான மழை பெய்தது. ஏரல் தரைமட்ட தாம்போதி பாலத்தின் வழியாக தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. ஆத்தூர் அருகே உள்ள சொக்கப்பழங்கரை பகுதியில் தாமிரபரணி ஆற்றில் தடுப்பணையை தாண்டி தண்ணீர் சென்றது. மேல ஆத்தூரில் வாழை தோட்டங்களில் தண்ணீர் தேங்கின.

கோவில்பட்டி

கோவில்பட்டியில் நேற்று முன்தினம் இரவில் பலத்த மழை பெய்தது. கோவில்பட்டி இளையரசனேந்தல் ரெயில்வே கேட்டில் சுரங்க வழிப்பாதை அமைக்கும் பணிகள் நிறைவு பெற்றது. அங்கு மெயின் ரோட்டில் இருந்து சுரங்க வழிப்பாதை வரையிலும் காங்கிரீட் ரோடு அமைப்பதற்காக தார் சாலையை அகற்றி பள்ளம் தோண்டினர். அதில் மழைநீர் தேங்கியதால் அப்பகுதி வியாபாரிகள், பொதுமக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். கயத்தாறு, கழுகுமலை, எட்டயபுரம், விளாத்திகுளத்தில் நேற்று முன்தினம் இரவில் லேசான மழை பெய்தது. நேற்று காலையில் வானம் மேகமூட்டமாக இருந்தது.

மழைஅளவுவிவரம்

தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் நேற்று காலை 8 மணி வரை பதிவான மழை அளவு (மி.மீட்டரில்) விவரம் வருமாறு:–

கோவில்பட்டி–39

ஓட்டப்பிடாரம்–32

சாத்தான்குளம்–52

ஸ்ரீவைகுண்டம்–1

தூத்துக்குடி–63

திருச்செந்தூர்–114

விளாத்திகுளம்–3

கயத்தாறு–33

காயல்பட்டினம்–72

குலசேகரன்பட்டினம்–175

கீழஅரசடி–10.20

எட்டயபுரம்–3

கடம்பூர்–24

மணியாச்சி–1

காடல்குடி–2

கழுகுமலை–19–

**<u>அணை நிரம்பியது</u>**

நெல்லை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் உள்ள நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை தொடர்வதால் அணைகளின் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து வருகிறது. மற்றொரு அணையான 156 கொள்ளளவு கொண்ட சேர்வலாறு அணை 83.99 அடியில் இருந்து சுமார் 12 அடி உயர்ந்து நேற்று காலை நிலவரப்படி 95.80 அடியாக அதிகரித்து உள்ளது. தொடரும் மழையால் விரைவில் 100 அடியை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மணிமுத்தாறு அணைக்கு வினாடிக்கு 842 கன அடிநீர் வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் 57.85 அடியில் இருந்து நேற்று 59.65 அடியாக உள்ளது. இங்கு 55.8 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருக்கிறது. அம்பை பகுதியில் 42 மில்லி மீட்டரும், சேரன்மாதேவியில் 43 மில்லி மீட்டர் மழையும் பதிவாகி உள்ளது.

செங்கோட்டை அருகே கண்ணுப்புள்ளிமெட்டு பகுதியில் உள்ள குண்டாறு அணை நிரம்பியது. 36.10 அடி கொள்ளளவு கொண்ட குண்டாறு அணை நிரம்பி வழிகிறது. தற்போது பரவலாக மழை பெய்து வருவதால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அணை நிரம்பி தண்ணீர்

வெளியேறுகிறது. அணை நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். விவசாய பணிகள் மும்முரமாக நடந்து வருகிறது. செங்கோட்டை சுற்று வட்டார பகுதியில் மழை பெய்து வருவதால் ஆயிரத்துக்கும் மேலான ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும்.

**<u>நெல்லை மாவட்டத்தில் பலத்த மழை தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் அதிகரிப்பு</u>**



நெல்லை, பாளையங்கோட்டையில் நேற்று காலை 10 மணி முதல் 12 மணி வரை வெயில் சுட்டெரித்தது. பின்னர் சாரல் மழை தூறிக்கொண்டடே இருந்தது. வானம் மேகமூட்டமாக காட்சி அளித்தது. நெல்லை பாலபாக்கியநகர், ரெயில்வே காலனி, பாளையங்கோட்டை அண்ணாநகர் உள்ளிட்ட பகுதியில் மழை நீர் தேங்கி கிடந்தது. நேற்று முன்தினம் இரவில் தச்சநல்லூர் பங்களாகுடியிருப்பு பழனி தெருவை சேர்ந்த ராமசாமி மனைவி சுப்பு லட்சுமியின் வீடு இடிந்து விழுந்தது. இடிபாடுகளுக்குள் சிக்கி காயம் அடைந்த சுப்புலட்சுமியை அக்கம் பக்கத்தினர் மீட்டு பாளையங்கோட்டை அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். இதேபோல் நெல்லை டவுன் வயல்தெரு முத்துராமலிங்கபுரத்தில் மோகன் என்ற ஆறுமுகம் என்பவருடைய வீடு நேற்று காலையில் இடிந்து விழுந்தது. குறுக்குத்துறை சுப்பிரமணிய சுவாமி கோவிலை வெள்ளம் சூழ்ந்தபடி செல்கிறது. தெற்கு பகுதியில் உள்ள மண்டபத்தை வெள்ளம் சூழ்ந்துள்ளது. தாழையூத்து அருகே ராஜவல்லிபுரத்தில் வயலில் மழை நீர் தேங்கி குளம்போல் கிடக்கிறது. இதில் குமிழ், குமிழாக தண்ணீர் வெளியே வந்து கொண்டு இருக்கிறது. அதிசய நீருற்று என்று அந்த பகுதி மக்கள் பார்த்தனர். ஆனால் தண்ணீர் அதிகமாக

கிடப்பதாலும், வயலில் நீர்மட்டம் உயர்ந்ததாலும் இப்படி குமிழ்வருகிறது என்று கூறப்படுகிறது.

<u>மழை அளவு</u>

நெல்லை மாவட்டத்தில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:–

அம்பை –42.3,

ஆய்குடி –25

சேரன்மாதேவி –43,

நாங்குநேரி –7,

பாளையங்கோட்டை–54.4,

ராதாபுரம் –9,

சங்கரன்கோவில்–9,

செங்கோட்டை –114,

சிவகிரி –5.2,

நெல்லை–19.8,

ஆலங்குளம் –56.4,

வீரகேரளம்புதூர்–17.

<u>அணைப்பகுதிகள்</u>

அணைக்கட்டு பகுதிகளில் பெய்த மழை அளவு வருமாறு:–

பாபநாசம் –95,

சேர்வலாறு –60,

மணிமுத்தாறு –55.2,

கடனா–18,

ராமநதி –51,

கருப்பாநதி –6,

குண்டாறு–17,

வடக்குபச்சையாறு–23.2,

அடவிநயினார் –7.

**<u>ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிப்பு; அணைகளின் நீர்மட்டமும் உயருகிறது</u>**



விழுப்புரம் மாவட்டத்தில் தொடர்ந்து 5-வது நாளாக பெய்து வரும் மழையினால் ஏரி, குளங்களுக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங் கியுள்ளது. அணைகளின் நீர்மட்டமும் வேகமாக உயருகிறது.

தொடர்மழை

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந் துள்ளது. அனைத்து மாவட் டங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த 4 நாட்களாக தொடர் மழை பெய்து வருகின்றது. நேற்றும் 5-வது நாளாக தொடர்ந்து மழை பெய்தது. விழுப்புரத்தில் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு மேல் பெய்யத் தொடங்கிய மழை இடை விடாது விடிய, விடிய மழை பெய்தது. இடையிடையே பலத்த மழையாகவும் கொட்டி தீர்த்தது. நேற்று காலையிலும் 10 மணி வரை தொடர்ந்து சாரல் மழை தூறிக் கொண்டே இருந்தது. இந்த மழையினால் விழுப் புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கும் நேற்று விடுமுறை அளிக்கப்பட்டது. தொடர்ந்து மதியம் 2 மணிக்கு பிறகும் மழை பெய்ய ஆரம்பித்தது. அவ்வப்போது விட்டு விட்டு மழை பெய்து கொண்டே

இருந்தது. இர விலும் இந்த மழை நீடித்தது. தொடர் மழையினால் சில இடங்களில் விவசாய பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளது. குடியிருப்பு பகுதிகளையும் தண்ணீர் சூழ்ந்துள்ளது. பலத்த மழையினால் விழுப் புரம் மாவட்ட போலீஸ் சூப்பி ரண்டு அலுவலக முன்பக்கத் தில் வலதுபுறம் உள்ள 100 அடி நீளமுள்ள மதில் சுவர் நேற்று காலை 11 மணியளவில் திடீரென இடிந்து விழுந்தது. இதை பார்த்த, போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்திற்கு மனு அளிக்க வந்திருந்த பொது மக்கள் பயத்தில் அலறி யடித்து ஓடினர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அந்த சமயத்தில் பொது மக் கள்யாரும் அருகில் இல்லா ததால் உயிர் சேதம் தவிர்க் கப்பட்டது.

திண்டிவனம்

திண்டிவனம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங் களில் கடந்த 5 நாட்களாக பலத்த மழை பெய்து வரு கின்றது. இதனால் திண்டி வனத்தில் உள்ள முக்கிய சாலைகளான புதுச்சேரி- செஞ்சி சாலை, சென்னை- திருச்சி சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. திண்டிவனம் நகர பகுதிகளில் உள்ள தாழ்வான இடங்களிலும் மழைநீர், குளம்போல் தேங்கி யுள்ளது. இதன் காரணமாக பொதுமக்கள் கடும் அவதி யடைந்து வருகின்றனர். குறிப்பாக வகாப் நகர், இந்திரா நகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை சுற்றி மழைநீர் குளம் போல் தேங்கியுள்ளது. மேலும் பலத்த மழையால் திண்டிவனம்- செஞ்சி சாலை யானது பலத்த சேதமடைந் துள்ளது. ஆங்காங்கே சாலை யில் உள்ள பள்ளமேடுகளில் வாகன ஓட்டிகள் சிக்கி கீழே விழுந்து படுகாயம் அடைந்து வரு கின்றனர். அதனை தவிர்க்க மாவட்ட நிர்வாகம், செஞ்சி சாலையை விரைந்து சீரமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். திண்டிவனம் அருகே மொளசூர் உள்பட பல்வேறு கிராமங்களில் முறையான வடிநீர் வாய்க் கால்கள் அமைக்கப்படாத காரணத்தால், அங்குள்ள சாலையில் மழைநீர்

பெருக் கெடுத்து ஓடியது. மேலும் அந்த நீரானது குடியிருப்பு களை சுற்றி நிற்பதால், அப் பகுதியை சேர்ந்த பொதுமக்கள் செய்வதறியாது தவித்து வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி பகுதிகளில் கடந்த 5 நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. நேற்று அதிகாலை 3 மணி முதல் 9.30 மணி வரை கள்ளக்குறிச்சி, கல்வராயன்மலை, தியாக துருகம், சின்னசேலம், சங்கரா புரம், ரிஷிவந்தியம், மூங்கில் துறைப்பட்டு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த மழை கொட்டியது. இதனால், கள்ளக்குறிச்சி பகுதிகளில் தாழ்வான பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஆறாக ஓடியது. அதைத் தொடர்ந்து மாலை 4 மணிக்கு மேல் மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. இதனால் கள்ளக்குறிச்சி பஸ் நிலையம், துருகம் சாலை உள்ளிட்ட தாழ்வான பகுதி களில் மழைநீர் தேங்கியது.

உளுந்தூர்பேட்டை

உளுந்தூர்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங் களில் உள்ள சாலைகள் மற்றும் வீதிகளில் மழைநீர் குளம்போல் தேங்கியுள்ளது. மழையால் சென்னை - சேலம் மற்றும் சென்னை - திருச்சி புறவழிச்சாலைகளில் பல் வேறு இடங்களில் தார்சாலை கள் பெயர்ந்து மிகப்பெரிய அளவில் பள்ளங்கள் உருவாகியுள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி யுள்ளனர். உளுந்தூர் பேட்டையை அடுத்த கிழக்கு மருதூர் மற்றும் பெரியகுறிக்கை கிராமங்களில் மழைநீர், வீடுகளுக்குள் புகுந்துள்ளது. இதனால் அவர்கள் மிகவும் சிரமப்பட்டனர். விக்கிரவாண்டியில் பெய்த தொடர் மழையினால் கயத் தூர் கிராமத்தில் வீராசாமி என்பவரின் குடிசை வீட்டின் சுவர் இடிந்து விழுந்தது. அப்போது வீட்டில் யாரும் இல்லாததால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. கொங்க ராம்பூண்டி கிராமத்தில் அண்ணாத்துரை, கலிவரதன், ஏழுமலை,

நாராயணசாமி ஆகியோர் வளர்த்து வந்த 4 பசுமாடுகள், மின்னல் தாக்கியதில் இறந்தது. இதேபோல் செஞ்சி, மேல் மலையனூர், திருக்கோவிலூர், வானூர், மரக்காணம் உள் ளிட்ட மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்த மழையினால் மாவட்டம் முழுவதும் உள்ள ஏரி, குளங் களுக்கு நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதே போல் கல்வராயன்மலை பகுதியில் பெய்த மழை காரணமாக பொட்டியம், கல்படை ஆறுகள் வழியாக வினாடிக்கு 170 கனஅடி மழைநீர் வந்து கொண் டிருப்பதால் நேற்று முன்தினம் 35 அடியாக இருந்த கோமுகி அணையின் நீர்மட்டம் 2 நாட்களில் 2 அடி உயர்ந்து நேற்று மாலை நிலவரப்படி 37 அடியாக உயர்ந்துள்ளது. அதுபோல் வீடூர் அணை, மணிமுக்தா அணைகளின் நீர்மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது. இதனால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இருப்பினும் தொடர்ந்து பெய்து வரும் இந்த மழை யினால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.